
www.padippakam.com

# அக்கினிக்குஞ்சு

புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களின் சர்வதேச கலாச்சார - இலக்கிய சஞ்சிகை

ஜூன். 1991.




படிப்பகம்

www.padippakam.com

With Compliments from...

AMP **GEORGE THOMAS** AMP

CONSULTING REPRESENTATIVE

- ☐ SUPERANNUATION
- ☐ TAX FREE SAVINGS PLAN
- ☐ ROLL OVERS
- ☐ CHILDRENS SAVINGS/EDUCATION PLANS
- ☐ INCOME PROTECTION PLAN

LIFE

DISABILITY

HOME

CONTENTS AND

BUSINESS INSURANCES

**20 PROSPECT STREET, BOX HILL, VIC 3128**

**Telephone (03)890-6207** **After Hours (03) 436-5216**

AMP

GEORGE THOMAS
M A., L.L.B.
Consulting Representative
20, Prospect Street,
BOX HILL, VIC. 3128
Ph 890 6207, AH 436 5216

படிப்பகம்

www.padippakam.com

### அகதிச் சிறுவரின் சிந்தனைகள்




**ஒருவன்:**
மாதா பிதாவை
மரணத்துள் தள்ளிவிட்ட
சூதாட்ட அரசியலின்
சூட்சுமங்கள் புரிந்து
தப்பிப் பிழைக்கும்
தந்திரங்கள் அறியாத
கள்ளங் கபடமற்ற
பிஞ்சுப் பருவத்து
சின்ன முகங்களில்
சிந்தனைக் கோடுகளை
ஆழப் பதித்த
அவசரந்தான் என்ன?

**மற்றவன்:**
திசை எது? இலக்கு எது?
செல்கின்ற பாதை எது?
எதுவும் புரியாத
இந்த நீள் பயணிப்பில்,
அன்புக் குரியவர்கள்
அனைவரையும் இழந்து,
எஞ்சியது சின்ன
ஆடுதான் என்றாலும்
அதனையும் எம்முடன்
அழைத்துச் செல்கின்ற
பலத்தை இதயத்துள்
மட்டுமே வைத்துள்ள
இந்தச் சிறுவர்கள்
வண்டியை நகர்த்திட
தங்கள் கரங்களை
தருவர் உண்டோ? □



## சிந்தனை புதிது

எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல்புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லையென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.


# அக்கினிக்குஞ்சு

புலம் பெயர்ந்த ஈழத் தமிழரின் சர்வதேச கலாசார
இலக்கிய மாசிகை

படைப்புகளில் வரும் கருத்துக்களும் சம்பவங்களும்
அந்தந்தப் படைப்பாளிகளின் சொந்தக் கருத்துக்கள்.
'அக்கினிக்குஞ்சின்' கொள்கையை பிரதிபலிக்க
வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை.

பிரதம இலக்கிய ஆலோசகர்:
எஸ்.பொ.

ஆசிரியர்:
யாழ்.எஸ்.பாஸ்கர்

துணை ஆசிரியர்கள்:
ரி.தர்மகுலசிங்கம், இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்

INTERNATIONAL CULTURAL AND LITERARY MONTHLY
OF DISPLACED EELAM THAMILS.

Chief Literary Advisor : Espo

Editor : Yal S.Baskar
Australia(03)555-3230

Deputy Editors : T.Tharmakulasingam
Denmark (75) 588-512.
: Ilampirai M.A.Rahman
India.
P.P.420011.


தசையினை தீ சுடினும் — ஈழ
தமிழது தளர்வுறு தாங்குமோ நெஞ்சு
விசைமிகு வேள்வியினை — ஆழ
வித்திட விளைந்தது அக்கினிக் குஞ்சு


Correspondence Contribution & Subscription Address
PRIYA PUBLICATIONS P.O.BOX 470 MOORABBIN VIC-3189 AUSTRALIA

அவுஸ்ரேலியா பிரியா பப்ளிகேஷன்ஸுக்காக ஏ.ஆர் பிரிண்ட்ஸ்
அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர்: எம்.ஏ.ரஹ்மான்


படிப்பகம்

www.padippakam.com

# மனம் விட்டு பேசுவோம்

அக்கினிக் குஞ்சுவின் வாசகர் வட்டம் இதழுக்கு இதழ் அகலித்து வருகின்றது. புதிய நாடுகளில் புதிய வாசகர்கள்! மகிழ்ச்சி. வாசகர்களிலே சிலர் 'எங்கள் பத்திரிகை' என்று உரிமை பாராட்டி கடிதங்கள் மூலமாகவும், தொலைபேசி மூலமாகவும், 'அன்புத் தொல்லை' தருகிறார்கள். இரட்டிப்பு மகிழ்ச்சி. "அக்கினிக் குஞ்சு' இன்ன வகைகளிலே எங்கள் எதிர்பார்ப்பினைப் பூர்த்தி செய்ய வில்லை' என்றும், 'ஏன் இதழ்கள் இவ்வளவு தாமதமாக வருகின்றன?' என்றும் முணுமுணுக்கவும் செய்கின்றார்கள். இந்த முணுமுணுப்புகளிலே கூட, அவர்கள் நமது சஞ்சிகையின் ஆரோக்கியமான வளர்ச்சியின் மீது காட்டும் அக்கறையை தரிசிக்கின்றோம். இவற்றால் நமது ஊக்கம் பலமடைந்துள்ளதை நிதானித்து உவகை அடைகின்றோம். உங்கள் ஆர்வத்தையும் அவசரத்தையும் பூர்த்தி செய்யும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இருப்பினும், உங்களுடைய எதிர்பார்ப்புகள் அனைத்தையும் பிரீதி செய்யும் வகையில் 'அக்கினிக் குஞ்சு'வை வெளியிடுவோம், என்கிற வாக்குறுதிகளை அள்ளித் தர முடியாமல் இருக்கின்றது. நாங்கள் வாக்கு வேட்டைக்குப் புறப்பட்டுள்ள வேட்பாளரல்லர், கண்டமானத்திலே வாக்குறுதிகளை அள்ளி வீசுவதற்கு! நமது பயணம் சத்தியஞ் சார்ந்தது. செல்லாத நாணயங்களைத் தரமாட்டோம். நீங்கள் ஏற்றுக் கொள்ளவும் மாட்டீர்கள் என்பதையும் நாம் அறிவோம். நமது வெளியீட்டு நிறுவனம் இன்னமும் முழுமையான பலத்தினை அடையவில்லை. அதற்கு உங்களுடைய பங்களிப்பும் தேவை. பரஸ்பரம் என்கிற ஒன்று தேவை. அதனை யாசிக்கின்றோம்.

மே இதழும், அதன் காரணமாக இந்த இதழும் வெளிவருவதிலே அதிக காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இதற்கு நம்மையும் மீறிய காரணங்களும் துணைபோயின. அக்கினிக் குஞ்சு இந்தியாவில் அச்சிடப்படுகின்றது. இந்தியத் தேர்தல்கள். முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை. அதனைத் தொடர்ந்து உருவான பதட்டநிலை. மிகக்கீழ்த்தரமான அரசியல் ஆதாயங்களுக்காக, தமிழ் நாட்டினைத் தஞ்சமடைந்துள்ள அப்பாவிகளான ஈழத் தமிழ் அகதிகளுக்கு எதிராகவும் கட்டவிழ்த்து விடப்பட்ட அநாகரிகமான பிரசாரங்கள். பொதுத் தேர்தல் ஒத்தி வைப்பு. இப்படி சங்கிலித் தொடராகச் சம்பவிக்கும் நிகழ்ச்சிகளின் மத்தியிலே, நமது சஞ்சிகையை உரிய காலத்திலே அச்சிட்டுத் தாருங்கள் என்று 'கெடுபிடி' செய்தல் நாகரிகக் குறைவானது என்று நாம் நினைக்கின்றோம். இந்த நெருக்கடிகளின் மத்தியிலே விடிந்துள்ள சுணக்கங்களைப் பாராட்டாது நம்மைத் தொடர்ந்தும் ஆதரிக்கும் உங்கள் அன்பினை யாசிக்கின்றோம். கலை-இலக்கியப் பணியிலே யாசகங்கூடக் கௌரவமானது என்பது நமது தளம்.

அக்கினிக் குஞ்சுவின் இலக்கியத் தரம் சம்பந்தமாகவும் நீங்கள் சில கேள்விகளை எழுப்பியுள்ளீர்கள். இதிலே, சிலபகுதிகளிலே, கையாளப்படும் நடை சற்றுக் கடினமானது என்றும் ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் பிடித்தமான நடை என்பது என்ன? செய்தித்தாள் நடையா? வீட்டு வழக்கு நடையா? அக்கினிக் குஞ்சு செய்திப் பத்திரிகையல்ல. சஞ்சிகை. பலதரப்பட்ட எழுத்தாளர்களுடைய ஆக்கங்கள் இடம்பெறுகின்றன. எழுத்தாளர்கள், நீண்ட காலப் பயிற்சியின் பயனாக, தமக்கென ஓர் எழுத்து நடையை வாலாயப்படுத்தி வைத்திருப்பார்கள் அந்த நடையை நமது வாசகர்களுக்காக நெகிழ்த்துங்கள், மலினப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்ளுதல் முறையா? இது குறித்து உங்களுடைய அபிப்பிராயங்களை அறிய விரும்புகின்றோம். இன்னும் ஒன்று. மனிதர் தமது மொழி அறிவை விருத்தி செய்ய நீண்ட பயணங்களை மேற்கொண்டுள்ளார்கள். மனித வரலாறும், மொழிகளின் வரலாறும் இதைத்தான் சொல்லுகின்றன. மொழியறிவை வார்த்தை வளம் விருத்தி செய்யும். 'அக்கினிக் குஞ்சு' மொழி அறிவினை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு வெளிவரவில்லையாயினும், உபவிளைவாக வாசகர்களுடைய வார்த்தை வளம் பெருகுவதிலே தீமை ஏதாவது நேர்ந்துவிடுமா? இதனையும் நாம் சிந்தனையிற் கொள்ளுதல் நல்லது. ஆனாலும், செய்தித் தகவல்களைத் தரும் பகுதிகள், திட்டமிட்டே இலகு தமிழிலேதான் தொடர்ந்து வெளிவர ஏற்பாடு செய்துள்ளோம்.

'புத்தி ஜீவிகளுக்கு ஏற்ற கனதியான விஷயங்கள் அக்கினிக் குஞ்சுவில் இல்லை' என்றும் சிலர் குறைபட்டுக் கொண்டார்கள். புத்தி ஜீவிகளின் அறிவுத் தாகத்தைத் தீர்ப்பதும் நமது

**யாழ். எஸ்.பாஸ்கர்**



படிப்பகம்

www.padippakam.com

இலக்கு அல்ல. புத்தி ஜீவிகளுடைய ஆதரவினை வரவேற்கின்றோம். அவர்களுடைய ஆக்கங்களுக்கு உரிய மதிப்பளித்துப் பிரசுரிப்போம். ஆனாலும், 'தந்தக் கோபுரத்திலே அமர்ந்து வறட்டு வித்தைகள் புரிவோம் வாரீர்!' என்று நமது பணியினைச் சுருக்கிக் கொள்வதற்கு நமது மனச்சாட்சி இடம் தர மறுக்கின்றது. புத்தி ஜீவிகளும் மக்களே என்கிற நிதானம் நமக்கு உண்டு.

சமரசம் என்பது இரண்டுக்கும் இடைப்பட்ட ஏதோ ஓர் இடம் என்று தெரிகிறது. அந்த இடத்தினை நிறுவுவதில், உங்களுடன் சேர்ந்தே, நாங்களும் தேடுதல் நடத்துகின்றோம். இதை மீண்டும் வலியுறுத்துகின்றோம். நீங்களும் நாங்களும் அழிந்து, **நாம்** மலருதல் வேண்டும். அப்பொழுதுதான் அக்கினிக் குஞ்சுவின் பயணத்திலே அர்த்தமும் இசையும் பொலியும்.

பல வேறு நாடுகளிலுமிருந்து பல சஞ்சிகைகள் வெளிவருவதை நாம் அறிவோம். சில சகோதரப் பத்திரிகைகள் நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றை அனுப்பி உதவிய ஆசிரியர்களுக்கு நன்றி. அந்த சகோதரப் பத்திரிகைகளின் வளர்ச்சியிலும் நமக்கு அக்கறை உண்டு. அவற்றை அறிமுகப்படுத்த 'தமிழ்த் தாகம்' என்ற புதிய பகுதியைச் சேர்த்துள்ளோம். புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய தமிழ்த் தாகத்தின் பயனாக வெளிவரும் சஞ்சிகைகள் பற்றிய அறிமுகம் இப்பகுதியிலே வெளிவரும். அத்தகைய சஞ்சிகைகளை நமக்கு அனுப்பி வையுங்கள். சகோதரப் பத்திரிகைகளான அவற்றின் வளர்ச்சியிலும் நமக்கு அக்கறை உண்டு.

அடுத்த இதழ் **டென்மார்க் சிறப்பு மலரா**கத் தயாராகிக் கொண்டிருக்கின்றது. 'அக்கினிக் குஞ்சு'வின் இணை ஆசிரியரான ரி. **தர்மகுலசிங்கமும்**, ஓவியர் **சௌந்தரும்** இணைந்து தயாரிப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளார்கள். இத்தகைய சிறப்பு மலர்களை வேறு நாடுகளில் இருந்தும் தயாரிப்பதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறியத் தருவதில் மகிழ்ச்சி அடைகின்றோம். **வணக்கம்.**

## பொதுக் கூட்டம்

**எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் 18-ந் தேதி ஞாயிறு காலை 10-30 மணியளவில் YWCA மண்டப 3-வது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் அவுஸ்ரேலிய தமிழ் அகதிகள் சங்க பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடைபெறவுள்ளது.**

**துணையாசிரியர் முகவரி மாற்றம்:**

**ரி. தர்மகுலசிங்கம்**
**P.O. Box-74 6600 VEJEN**
**DENMARK**

## கா(த)லர்

"கண்ணே! என் செல்வ மனைத்தையும், உன் காலடியில் வைப்பேன்."
"உங்களிடம் செல்வம் அதிகமில்லையே."
"உன் சிறிய பாதங்களின் பக்கத்தில் அதுவே பெரிதாய்த் தெரியும்."

- காதலில் வென்ற ஒருவன்

☐

## சம்சார சமாசாரம்

**மனைவி :** ஒருவர் தன் மனைவிக்கு பத்தாயிரம் ரூபாய் முத்துமாலையை பரிசளித்தது பற்றி இன்று பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறது. இந்த வீட்டில் அப்படி ஒன்றும் நடப்பதில்லையே.
**கணவன் :** அதே பத்திரிகையில் தன் மனைவியை வெட்டிப் புதைத்தவனைப் பற்றியும் போட்டிருக்கிறதே! அப்படியும்தான் ஒன்றும் இங்கு நடைபெறுவதில்லை.

## ஒற்றுமை உறவு

ஆண்களும் பெண்களும் ஒரு விஷயத்தை ஒப்புக் கொள்ளுகிறார்கள் : பெண்களை நம்ப முடியாது!

☐

## மாமி உறவு

கணவன் மனைவியைப் பார்த்து : உன் உறவினரைப் பற்றி ஒன்று சொல்வேன். என் மாமியைக் காட்டிலும் உன் மாமியை எனக்கு மிகவும் பிடிக்கும்.

☐

## கோப்பி உறவு

லேடி அஸ்டர் : நான் உங்கள் மனைவியாய் இருந்தால், உங்கள் கோப்பியில் நஞ்சு கலந்திருப்பேன்.
சேர்ச்சில் : அம்மா, நான் உங்கள் கணவனாக இருந்திருந்தால் அதை மகிழ்வுடன் பருகுவேன்.



படிப்பகம்

www.padippakam.com

ஹோம்புஷ் (HOME BUSH) ஸ்பைஸ் சென்டருக்கு முன்னால் கேட்ட ஒரு டயளாக் வருமாறு :

''மச்சான்! எங்கடை ஊரிலை குண்டுகள் போட்டு எல்லாத்தையும் நாசமாக்கிறாங்களாம்...சரியான சாவுமாம்...''

''அதுதான் நல்லது மச்சான்...உப்பிடி நடந்தாத்தான் எங்கடை Refugeeகான Application களை இவங்கள் சீக்கிரமா பாஸ் பண்ணுவான்கள்''

---

அமேரிக்க ஜனாதிபதியாகத் திகழ்ந்தவர் ஆபிரகாம் லிங்கன். அவர் ஒரு தடவை தமது பூட்சுக்குத் தாமே பாலிஷ் செய்து கொண்டிருந்தார்.

அதனைப் பார்த்துக் கொண்டிருந்த பிரிட்டிஷ் கனவான் ஒருவர், ''பிரித்தானியக் கனவான்கள் தங்கள் பூட்ஸுக்குத் தாங்களே பாலிஷ் செய்து கொள்வது வழக்கமில்லை.'' என்று கர்வத்துடன் சொன்னார்.

அதற்கு லிங்கன் மிகவும் அமைதியாக, ''அப்படியா? அப்படியானால், யார் பூட்சுக்கு அவர்கள் பாலிஷ் செய்வது வழக்கம்?'' என்று கேட்டார்.

---

லண்டன் மாநகரிலே நடைபெற்ற இராஜதந்திரிகள் விருந்தொன்றில் முன்னாள் பாரத ஜனாதிபதி டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களும் கலந்து கொண்டார். அவர் இயல்பாகத் தமது விரல்களினாலே சாப்பிட்டுக் கொண்டிருந்தார். அதனைப் பார்த்த சர் வின்ஸ்டன் சேர்ச்சில், ''ஏன் நீங்கள் கரண்டியை உபயோகிப்பதில்லையா?''என்று கேட்டார்.

''என் விரல்களை வேறு யாருமே சாப்பிடுவதற்கு உபயோகிப்பதில்லை...'' என்று இராதா கிருஷ்ணன் அமைதியாகப் பதிலளித்தார்.

---

'தென்னை மரத்தில தேள் கொட்டினால் புன்னை மரத்தில நெறி கொட்டிச்சுதாம்!' எண்டு அம்மம்மா அடிக்கடி சொல்லுறா! இதுக்கு என்ன அண்ணை அர்த்தம்?

இப்ப கண்டறியாத 'பழமொழியள் தான் வேண்டிக் கிடக்குதோ? இப்ப தமிழ் ஈழத்திலை சண்டை' நடக்கிறது தெரியுமல்லே தம்பி? இது யாருக்கும் யாருக்கும் நடக்கிற சண்டை? அது சிங்களவங்களுக்கும் தமிழனுக்கும் நடக்கிற சண்டை இல்லையாம். ஜனாதிபதி பிரேமதாஸ சொன்னாப்பிறகு, அதுக்கு அப்பீலும் உண்டே.புலியளுக்கும் யூ. என். பி. அரசாங்கத்துக்கும் இடையிலைதான் சண்டை நடக்குதாம். சரி; அப்பிடியே வெச்சுக் கொள்ளுவம். அப்ப, சண்டையை நிறுத்த வேணும் எண்டால், ஆரும் ஆரும் பேசிச் சச்கரவைத் தீத்துக் கொள்ள வேணும். தம்பி, நீர் யூ. என். பி. அரசும் புலிகளும் பேசித் தீர்த்துக் கொள்ளவேணும் எண்டுதானே சொல்ல வாறீர்? உதுதான் பேய்க் கதை.

| | | |
|---|---|---|
| 1) இ. தொ. க. | 5) ஈ.பி.ஆர்.எல்.எப். | 9) த. வி. கூ. |
| 2) ஜ. தொ. க. | 6) ஈ.என்.டி.எல்.எப். | 10) த. கா. |
| 3) தொ' தே. ச. | 7) ஈ. பி. டி. பி. | 11) டெலோ |
| 4) புளொட் | 8) ஈ. எல். ஜே. பி. | |

என்கிற பதினொரு தமிழர் சார்பான கட்சிகள் கூடிப் பேசுகின்றன. இவை ஏன் பேச வேணும்? இவைக்கும் யூ.என்.பி. ஆட்சிக்கும் சண்டையோ? அம்மம்மா என்ன சொல்லுறா? 'தெனா' மரத்திலை 'தேயன்னாா' கொட்டினால், புனா மரத்தில... நீ வாயைப் பிளக்காதை தம்பி. நான் நிறுத்திக் கொள்ளுறன்.

# அறுவை

## ராஜமித்ர

இங்கிலாந்து தேசத்து பத்திரிகையாளன் ஒருவன் காந்திஜியை கேலி செய்ய விரும்பினான். எனவே, அவன் காந்திஜியைப் பார்த்து, ''இந்திய மக்கள் ஏன் உங்களைத் தலைவராக அனுப்பி இருக்கிறார்கள்? உங்களிலும் பார்க்க நல்ல தலைவர் அவர்களுக்குக் கிடைக்கவில்லையா'' எனக் கேட்டான்.

''அப்படியல்ல. உங்கள் நாட்டவர்களைத் தக்கபடி கையாள நானே போதுமானவன் என்று இந்திய மக்கள் நினைத்திருக்கலாம்'' என்று காந்திஜி அமைதியாகப் பதில் அளித்தார்.

---

''இலங்கை உலகத்திலேயே மிக ஆச்சரியமான தேசம் என்று பிரிட்டிஷ் இராஜதந்திரி லோய்ட் ஜோர்ஜ் சொல்லியிருக்கிறாரே; அதைக் குறித்து என்ன நினைக்கிறீர்?'' என்று அறிஞர் பேர்னாட் ஷோவைக் கேட்டார்கள்.

''அந்த அரசியல்வாதி, தாம் போன எல்லா தேசங்களைக் குறித்தும் இவ்விதமாகக் கூறுவது வழக்கம். அதைக்கேட்டு ஒருவரும் ஏமாற வேண்டாம்'' என்றார் ஷோ.

படிப்பகம்

www.padippakam.com

# தாயகத்தில் தமிழர்க்கு மேலும் கெடுபிடிகள்!

**கொழும்பில்,** கொள்ளுப் பிட்டி பிளவர் ரோடில் உள்ள இராணுவ - போலிஸ் கூட்டுச் செயலகக் கட்டடம் ஜூன் 21ம் தேதி குண்டு வைத்து சேதப் படுத்தப்பட்ட பிறகு, கொழும்பி லும், அதன் சுற்றுப் புற பகுதி களிலும் தமிழ் இளைஞர்கள் வெளியில் தலை காட்டவே முடியாத திடீர் பயங்கரச் சூழ் நிலை உருவாகி உள்ளது. நூற்றுக்கணக்கான தமிழ் இளை ஞர்கள் பெரிதும் ஆக்கினைப் படுத்தப்பட்டு வருகிறார்கள். விசாரணை என்ற பெயரில் இன்னும் ஏராளமானவர்களை போலிஸ் காவலில் வைத்து உள்ளனர்.

கொழும்பிலோ அல்லது நாட்டின் இதர பகுதிகளிலோ ஏதேனும் குண்டு வெடித்தது என்றால் உடனே போலிஸ் காரர்கள் பாய்வது தமிழ் இளை ஞர்கள் மீதுதான்.

நடந்து விட்ட சம்பவங்க ளுக்காகவும் நடக்கப் போவதாக தாங்கள் எதிர்பார்க்கும் விபத் துக்களுக்காகவும் தமிழ் இளை ஞர்கள் கைது செய்யப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

வெளியூர்களில் இருந்து கொழும்புக்கு வரும் தமிழர் களாக இருந்தாலும் சரி அவர் கள் தாங்கள் எங்கு தங்கப்போகி றார்களோ அந்த இடத்துக்கு அருகில் உள்ள காவல் நிலையங் களில், தங்களைப் பற்றிய விவ ரங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று இலங்கை அரசு உத்தரவிட்டுள்ளது. கொழும் பில் நிரந்தரமாக தங்காதவர் களுக்கும் இது பொருந்தும் என்று அது கூறியுள்ளது.

கொழும்பில் ராணுவ செயலகக் கட்டடத்தை குண்டு வைத்து தகர்க்க திட்டமிட்டது வரதன் என்ற 32 வயது வரத ராஜன்தான் என்பது போலி சார் நம்பிக்கை. வல்வெட்டித் துறையைச் சேர்ந்த வரதன் முன்னர் இ. போ. ச. கண்டக்ட ராக வேலைபார்த்ததாகத் தெரி கிறது. வன்முறைகளைத் தொடர்ந்து சிறையில் தள்ளப் பட்டிருந்த வரதன் ராஜிவ்-ஜெய வர்த்தனே ஒப்பந்தத்தின்படி, காவலில் வைக்கப் பட்டிருந்தவர் களுக்கு பொது மன்னிப்பு வழங் கப்பட்ட சமயம் வெளியில் வந்த தாகத் தெரிவிக்கப் பட்டது.

போலிசார் என்ன கூறு கிறார்கள் தெரியுமா?

கொள்ளுப்பிட்டி ராணுவக் கட்டடத்தை ஜூன் 20-ம் தேதியே இசுசு வேன் ஒன்றில் 70 கிலோ வெடி குண்டுகளை நிரப்பி தற்கொலைப் படை இளைஞன் மூலம் வெடி வைத்து தகர்ப்பது வரதனின் திட்டமாம்.

வெடிகுண்டுகளை வெடிக் கச் செய்யும் கருவியை முடுக்கி விட்டு தப்பி ஓடி வந்து விட அவகாசம் உண்டு என்று தற் கொலைப் படை இளைஞனிடம் கூறப் பட்டதாம். ஆனால் 19-ம் தேதி ஒத்திகை பார்க்கப்பட்ட சமயம் அந்தக் கருவியை முடுக்கி விட்ட ஓரிரு நிமிடங்களில் குண்டு வெடித்து விட்டதால் அந்த இளைஞன் பயந்து போய் பின் வாங்கி விட்டானாம்.

அந்த இளைஞன் இப் போது தங்கள் காவலில் இருப் பதாக போலிசாரர் கூறினர். சந்திரன் என்ற மற்றொரு இளைஞன் மூலம் வரதன் தன் திட்டத்தை மறுநாள் நிறை வேற்றிக் கொண்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

வரதனின் காதலி என்று கூறப்படும் இரத்மலானையைச் சேர்ந்த ஒரு பெண் கொடுத்த தகவலின்படி உளவுப் போலிஸ் படை ஒன்று மலை நாட்டில் கொட்டக்கலைப் பகுதியில் உள்ள தோட்டமொன்றுக்குச் சென்று அங்கு கங்காணி வேலை பார்க்கும் ஒருவர் வீட்டில் வரதனை கண்டு பிடித்திருக் கிறது. ஆனால் அதற்குள் போலி சார் வருகையை அறிந்து வரதன் சயனைட் நஞ்சருந்தி விட்டதாக போலிசார் கூறினர்.

வரதனுக்கு, மலைநாட்டில் அடைக்கலம் தேடிக்கொடுத் தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தலவாக்கொல்லை சந்திரசேகரன் என்ற ஒரு தொழிற் சங்கத் தலைவர், தர்மலிங்கம் என்ற ஒரு கல்லூரி அதிபர் ஆகியோர் உள்பட மொத்தம் 31 பேரை (ராணுவச் செயலகக் கட் டிட குண்டு வெடிப்பு தொடர் பாக) போலிசார் கைது செய்து உள்ளனர்.

இவர்களை எதற்காக கைது செய்தீர்கள் என்று போலி சாரிடம் கேட்பதற்குக்கூட தமிழி னத் தலைவர்கள் எவரும் இல்லா தது ஒரு பெரிய துரதிருஷ்டம்.

இனியும் கூட கொழும்பில் சில முக்கிய இடங்களில் தற் கொலைப்படை மூலம் பல கட்டி டங்கள் தகர்க்கப்படலாம் என்ற அச்சம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

அதிபர் பிரேமதாஸாவே இதனை வெளிப்படையாகக் கூறியிருக்கிறார். ஆயுதக் கலா சாரம் இன்று தற்கொலைப் படைகள் மூலம் கார்க் குண்டு கலாசாரமாக மாறிவிட்டது. இப்படி எல்லாம் செய்து இலங்கை அரசை எவரும் பணிய வைக்க முடியாது என்று அவர் சூளுரைத்திருக்கிறார்.

அண்மையில் நடந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல்களில் ஆளும் கட்சிக்கு கிடைத்த அபரி மிதமான வெற்றி காரணமாக அவர் நாடாளுமன்றத்துக்கும் திடீர் தேர்தலை நடத்தி விடலா மா என்று யோசிக்கிறார்.



படிப்பகம்

www.padippakam.com

# தாயக மண்ணில்

நாடாளுமன்றத்தில் அவரது கட்சிக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை. திடீர் தேர்தல் மூலம் அக்குறைதனை நீக்கிக் கொள்ள முடியும் என அவர் நம்புவதாகத் தெரிகிறது. தமிழர் பிரச்சினையை அவரது கோணத்தில் தீர்க்க அவருக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் ஒரு பங்கு பலம் தேவையாக உள்ளது

.ஓரிரு இதழ்களுக்கு முன் 'தாயக மண்ணில்' தமிழீழப் பிரச்சினைக்கு கூடிய விரைவில் பேச்சு வார்த்தை மூலம் தீர்வினை எட்ட பிள்ளையார் சுழி போடப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்தேனே நினைவிருக்கிறதா?

ராஜீவ் காந்தி படுகொலை மற்றும் கிழக்கிலங்கையில் நடந்த படுகொலைகள் காரணமாக அந்தப் பிள்ளையார் சுழி கேள்விக் குறியாக்கப்பட்டு விட்டது.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முதல் வாரம் அதாவது மே 15ம் தேதி அளவில் இலங்கை அரசுக்கும் ஈழப் புலிகளுக்கு மிடையில் எந்த அடிப்படையில் பேச்சு வார்த்தைகளைத் தொடங்குவது என்பதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு அதற்கு இறுதி வடிவமும் தரப்பட்டதாகத் தெரிகிறது.

அத்திட்டத்தின் கீழ் உத்தேச பேச்சு வார்த்தை பல கட்டங்களாக நடத்தப்பட விருந்ததாகவும் தெரிகிறது.

அதன்படி முதல் கட்ட பேச்சு வார்த்தை கடந்த மே-15 முதல் வரும் ஆகஸ்ட் 25 வரை, 100 தினங்களுக்கு நடப்பதாக இருந்ததாம். அதன்பிறகு, செப். 1 முதல் வரும் பிப்.28 வரை 180 தினங்களுக்கு இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை. அந்தப் பேச்சு வார்த்தையின் விளைவாக இலங்கை அரசியல் சட்டத்துக்கு திருத்தம் கொண்டு வரவும், வடகிழக்கில் இடைக்கால அரசு அமைக்கவும் திட்டமிடப் பட்டதாகக் கருதப்படுகிறது.

அத்தோடு முடிந்து விடவில்லை. வரும் மார்ச் 1 முதல் ஏப்ரல் 30 வரை 60 தினங்களுக்கு மூன்றாவது கட்டப் பேச்சு வார்த்தை நடத்தி வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தவும் யோசிக்கப் பட்டிருந்தது.

அத்தேர்தல்களின் விளைவாக அடுத்த மே 15-ல் தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட புதிய சபையை (மாகாண சபை?) அமைக்கவும் உத்தேசிக்கப் பட்டிருந்தது.

இப்பேச்சு வார்த்தைக்கான நிபந்தனைகள், (1) பிரச்சினையில் சம்பந்தப் பட்ட கட்சிகள், இலங்கை அரசும் ஈழப்புலிகளும்தான். வேறு யாருக்கும் அதில் இடம்கிடையாது.(2) பேச்சு வார்த்தை விவரங்கள்அனைத்தும் ஆவணங்களாக பதியப்பட வேண்டும். (3) பேச்சுவார்த்தையின் இலக்கு ஓராண்டுக்குள் (அதாவது 92 மே 15-க்குள்) வட கிழக்கில் தேர்தலை நடத்துவதாக இருக்க வேண்டும், என்பது தான்.

மே மட்டுமின்றி ஜூனும் முடிந்து ஜூலையும் பாதி வளர்ந்து விட்டது. பேச்சு வார்த்தைக்கான எந்த 'சிலமனை'யும் காணோம்.

இரு தரப்புமே பேச்சு வார்த்தையில் ஆர்வம் காட்டுவதால் எந்த நேரமும் பேச்சு வார்த்தைக்கான அழைப்பு வெளியாகலாம் என நம்பப்படுகிறது.

அந்த அழைப்பும் கூட நேரடியானதாக இருக்கும் என்று தோன்றவில்லை. அதுவும் கட்டம் கட்டமாகத்தான் இருக்கும் என்று விவரமறிந்தவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவை, பிரச்சினை தீர்வுக்கு ஆரம்பமாக ஈழப்புலிகள் வன்முறைகளைக் கைவிட வேண்டும் என முதலில் பிரேமதாச அழைப்பு விடுப்பாராம். அதன் பிறகு வடக்கு கிழக்கில் போர் நிறுத்தத்திற்கு ஈழப்புலிகள் இணங்குவார்கள் என்றும் போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து பேச்சு துவங்கும் என்றும் கூறப்படுகிறது.

ஆனால், எடுத்த எடுப்பிலேயே இருதரப்பும் நேரடி பேச்சில் இறங்கும் என்று தோன்றவில்லை. இரு தரப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மத்தியஸ்தர் மூலம்தான் இப்பேச்சு நடக்குமெனத் தெரிகிறது. இருதரப்புக்கும் அவர்தான் (Negotiator) பாலமாகத் திகழ்வாராம்.

இறுதிக் கட்டத்தில் மட்டும் (வரும் மே 1 முதல் மே 10 வரை) ஈழப்புலிகளின் தலைவர் பிரபாகரனும் பிரேமதாசாவும் பேசி ஒப்பந்தத்தில் கையெழுத்திடலாமாம்.

வட கிழக்கு நிரந்தர இணைப்பு, இலங்கை அரசியல் சட்டத்தின் ஆறாவது திருத்தம் என்பன, முதல்கட்டப் பேச்சு வார்த்தையில் முடிவாகக் கூடிய விஷயங்களாக இருக்கலாம்.

பேச்சுவார்த்தை என்றால் அது ஐக்கிய இலங்கை என்ற அரசமைப்புக்கு உட்பட்ட மாநில அரசுக்குத்தானே வழிவகுக்க முடியும்? இதற்கிடையில், ஜூலை மாதக் கடைசி வாரத்தில் இலங்கையின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹெரால்ட் ஹேரத், இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக புது தில்லிக்குச் செல்ல இருக்கிறார்.

ஈழப்புலிகள் மட்டும்தான் இலங்கைத் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர். எனவே, இனப் பிரச்சினை தொடர்பாக

30-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

"பூத்துச் சொரிகையிலே
பூக்கருகிப் போனதுவோ?
மாதா செய் தீவினையோ
மலரமுன்னே போனாயோ...?

நீ படுத்துக் கிடந்த அரைப் பக்கமிருந்து ஒப்
பாரிக் குரல் கேட்கின்றது. அது உன் அம்மா
வின் குரல். துக்கத்திற் கனத்துக் கதறுகின்
றது. எது உன் முடிவாக இருக்கக் கூடாது
என்று இவ்வளவு நேரமும் பிரார்த்தித்துக்
கொண்டிருந்தேனோ, அதுதான் உன்
முடிவா? என் கல்யாணி!

"ஏய் கெழவி. இதுங் ஹோஸ்பிட்
டல் தெரியுந்தானே! சத்தங்
போட வேணாங்."

'நேர்ஸ்' கிழவியை அறைக்கு வெளியே
கொண்டு வந்து விடுகிறாள். புழுவா
கத் துடித்து, சுவருடன் தலையை
மோதிக் கொண்டே குரல் எழுப்பி
அழுகின்றாள். 'மேளே, கல்யாணி நீ
போய் விட்டியாடி?' என்று நெஞ்சு
வெடிக்கப் புலம்புகிறாள். ஒவ்வொரு
வார்த்தையும் என் என்பின் குழலட்
டையையுஞ் சுண்டுகின்றது.
'நேர்ஸ்' என்னைப் பார்க்கிறாள்
எனது விழிகளை அவளது விழிகள்
துழாவுகின்றன. அந்த துகட் கண
பொழுதில் அந்தச் செய்தியை மௌன
பாஷையிற் சொல்லி விட்டாள்.



நாற்ற[illegible] ரி,
துப் பெருகும் கண்ணீர். [illegible]
சத்தை இழந்து, இயக்க சக்தி இற்று......
சுவரோரம் போடப்பட்டிருக்கும் 'வாங்'
கிலே குந்துகின்றேன்.

'நேர்ஸ்' என்னைத் தாண்டிச் செல்கின்
றாள். மரங்கொத்திப் பறவை மரத்
தினைக் குடையும் பொழுது ஏற்படும்
ஒலியினைப் பிரதி பண்ணுகின்றது,
சீமெந்துத் தரையில் உராயும் அவளு
டைய குதியுயர்ந்த சப்பாத்துக்கள்.

வழியாக
மூச்சு, மூக்குத் துவாரங்கள்
வெளியேற முடியாது, துருத்தியாக உப்பி,
எனது சுவாசப் பையினை அவஸ்தைப் படுத்
துகின்றது. விரல் நொடிப்பு நேரத்திலே
ககனத்து ஒளி முழுவதும் அஸ்தமிக்க, அமா
வாசை மையிருட்டு அகண்டாகாரமாக விரி
கின்றது. இருள் குதிர்ந்த அந்தப் பாளை
யிலே சினைத்திருந்த அக்கினிக் கோளங்க
ளெல்லாம் என் சென்னியிலே அறுந்து
விழுந்து, கேசத்தினைப் பொசுக்கி விட்ட
தைப் போன்று...... சிதை எரிந்த நாற்
றமோ...... பிணம் வெந்து கக்கும் புலால்

1963 ஆம் ஆண்டில், மட்டக்களப்பிலே நடைபெற்ற தமிழ் விழாவில் முதல் பரிசு
பெற்ற சிறுகதை 'பூ'. இச் சிறுகதைப் போட்டி இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தி
தினால் நடத்தப்பட்டது. ஒழுக்கப் பிறழ்வு கதையின் வஸ்து. நிகழ் காலச் சம்பாஷ
ணைகள், நிகழ் கால நினைவுகள், கடந்த காலச் சம்பவங்கள் என்கிற மூன்று இழை
களை வைத்து இக் கதை பின்னப்பட்டுள்ளது. கதைச் சித்திரிப்புப் பாணியிலே, இஃது
ஈழத்துச் சிறுகதை வளத்திற்கு புதிது பெய்தது. இதனை ஆக்கிய 'இளம்பிறை'
எம். ஏ. ரஹ்மான், ஈழத்து உருவகக் கதைத் துறையின் முதல்வர்.

-ஆர்



படிப்பகம்

www.padippakam.com

அவளுடைய முகத்தையும் அவள் சொல்லக்கூடிய செய்தியையும் தவிர்ப்பதற்காகத் தீக்கோழி சாகஸம் புரிந்து கரங்களுக்குள் எனது முகத்தினைப் புதைத்துக் கொள்கின்றேன். சின்னி விரல் பொருந்த மறுக்கும் 'கிறாதி'யில் ஒரு விழி புகுந்து, சப்பாத்துக் குதியினை மேய்கின்றது.

இதே போன்ற சப்பாத்துக்களிலே புகுந்து, உயரத்தை அதிகரித்து, கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக் கடைக்குள் நீ நுழைகின்றாய். நான் உன்னை உன்னிப்பாகப் பார்ப்பதை நீ எப்படி அறிந்தாய்? உள்ளுணர்வா? நவீன நாகரிகத்தின் முடக்குகளை அறிந்தவளாகக் கூந்தலைப் பலகோணங்களிலே முறுக்கிக் கொண்டை போட்டிருந்தாய். சிரசினைக் கழுத்து வாக்கில் வெட்டி என்னைப் பார்த்தாய். புகைப் படத்திலே பார்த்த அதே முகம்; அதே விழிகள்; அதே நுதல்; அதே மூக்கு...... படத்தில் இரட்டைப் பின்னல்களுடன் மங்குளிப் பெண்ணாகத் தோன்றிய நீ...... நீ கல்யாணியா? அல்லது வேறொருத்தியா? நீ உன் சினேகிதியின் காதைக் கடித்ததும், அவள் என்னைத் திரும்பிப் பார்த்துத் தலையை ஆட்டியதும்... உனது திருட்டுப் பார்வை என்னை மேய்ந்ததும்......முதற் சந்திப்பு. அடுத்த சந்திப்பு மணவரையில் நிகழ்ந்தது.



உலகின் நவீன போக்கு என்ற ஆற்று வெள்ளத்திலே சுழிந்து செல்லாது, வீட்டுக் கொள்ளையிலே இருக்கும் கிணற்று நீராக என்னை வளர்த்த பெருமை என் தந்தையைச் சாரும். வாலிப உணர்ச்சிகள் பதியம் போடும் பல்கலைக் கழகத்து வாழ்க்கையிலே, பெண்களுடன் பேசக் கூச்சப்படுவேன். இருப்பினும், என் முன்னால் நடமாடும் ஒவ்வொருத்தியையும் கற்பனையிலே என் காதலியாக்கி...... தினந் தினமும் புதிது புதிதாக யாரையோ காதலிக்கின்றேன் என்கின்ற ஊமைக் கற்பனையிலே கூச்சம் போக்கி, வாழ்க்கையின் சிருஷ்டி விளையாட்டிற்குள் ஒரு பெண்ணை இணைத்துக் கொள்வதற்கிடையில் என் படிப்பு முடிந்தது. மீண்டும் தந்தையின் மூக்கு நிழலிலே வாழத் தொடங்குகின்றேன். ஜதை சேர்த்து வாழும் சமூகப் பண்பாட்டிற்கொப்ப என்னைக் கல்யாணச் சந்தையிலே நிறுத்தினார் அப்பா... குணமும்-குலமும் பார்ப்பதாக வெளியே சொல்லிக் கொண்டு சீதன ஆதனத்திலே இறையினைக் குத்தி, பெண் பார்க்கும் படலத்தினை அப்பாவே நடத்துகின்றார்...... சுற்றிலே எப்படியோ உன்னை அவருக்குப் பிடித்து விட்டது. உனது புகைப்படம் என்னிடம் காட்டப்படுகின்றது. 'வேண்டும், வேண்டாம்' என்று எதுவும் சொல்லவில்லை. வார்த்தைகள் தொண்டையில் சிக்கிய மீன் முட்களாகின்றன. மௌனத்திற்குச் சம்மதம் என்ற அர்த்தம் பாய்ச்சப்பட்டு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. உயர்ந்த கிடுகுவேலியின் 'அறுக்கை'யுள் வாழ்ந்து விட்டாலும், அம்மாவுக்குப் புதிய போக்குகள் தெரியும். நீ நகைக்கடைக்கு வரும் சமாசாரத்தை அவள் தான் சொன்னாள். உன்னை பார்த்ததிலிருந்து அங்கே 'சம்மதம் சம்மதம்'. என்று ஓராயிரம் முறை என் மனதிற்குள் சொல்லியிருப்பேன். கல்யாணி, நீ அதியற்புத அழகியடி!

இனிய நினைவுகள் மலர்களைப் போன்று ரம்மியமானவை. ஆனால், இன்று அவை பிணத்தின் மீது தூவப்பட்ட மலர்களைப் போன்று......

விவாகமான பதினைந்தாம் நாள், நீ ஆசிரியையாகக் கடமை பார்க்கும் பாடசாலைக்குப் பிரயாணமாகின்றோம்.

நெஞ்சக் குளத்திலே அந்த நினைவு வட்டம் கரையைத் தட்டுகின்றது......

''ஆசை வெட்கமறியாது'' என்பது எவ்வளவு உண்மை...... அந்தப் புகையிரதத்திற்குள் கூட்டம் முட்டி வழிவதைக் கவனித்தோமா? நீயும் நானும் மட்டும் ஏதோ தனியான பிரபஞ்சத்திலே பிரயாணஞ் செய்வதான எண்ணம். இருவரையும் இணைக்கின்றது.

'அத்தான், பெண்களை ஏன் மலருக்கு ஒப்பிடுகின்றார்கள்?''

''மென்மையினால் ,......?''

''ஆண்களை ஏன் வண்டிற்கு ஒப்பிடுகின்றார்கள்?''

''பல மலர்கள் மீது தாவும் பலவீனம் அவர்களுக்கிருப்பதால்......''

''அத்தான்!''

உன் விழிகளில் நீர் உற்கைகள் உதிருகின்



படிப்பகம்

www.padippakam.com

றன...... குறுக்காக ஓடுவதாகத் தோன்றும் மரங்களைப் பார்க்கும் பாவனையில் மறைக்கின்றாய். ''என்ன கல்யாணி?''

''நீங்கள் இந்த மலர் மீது மட்டும்...... என்னால் தாங்க முடியாது......''

''பைத்தியக்காரி! கையிலே பாரிஜாத மலரை வைத்துக் கொண்டு ஊமத்தம் பூவையா நாடுவேன்?''

''கிளியைப் போல மனைவியிருந்தாலும், ஆண்கள் குரங்கைப் போன்று ஒரு வைப்பாட்டியை நாடுவார்கள் என்று சொல்வார்கள்''-சொல்லும் பொழுதே 'களுக்' கென்று சிரித்து விடுகின்றாய்.

உன் எதிர்ப் பக்கமாக அமர்ந்திருந்த அந்த நடுத்தர வயதுப் பெண்ணின் காதிலும் விழுந்திருக்க வேண்டும். அவள் அர்த்தபூர்வமாகச் சிரிக்கிறாள். குங்குமச் சிரிப்பினைக் கன்னத்திலே அள்ளி அப்பி,நீ நாணத்துடன் பட்ட அவஸ்தை.

''என்ன, சின்னக்கிளி! ஒரு வருஷத்துக்குள்ளை இஞ்சையே மாறுதல் எடுத்திட்டியே?''

''நான் தானே போகேக்குள்ளை சொல்லிப் போட்டுப் போனனான். அவன் டாக்குத்தனுக்கு ஒரு பாடம் படிப்பிப்பனெண்டு!

''உனக்கென்ன? 'எம்பி' உன்ர கையுக்குள்ளை.''

''கையுக்குள்ளை'' என்ற சொல்லை விரசஞ் சிந்தத் தொனிக்கிறாள். என்னைத் தாண்டி அந்த இரண்டு கங்காணிப் பெண்களும் நீ கிடக்கும் அறைக்குள் நுழைகின்றார்கள்.

கல்யாணி, உன் கொடிவாக்கு உடம்பிலே அந்தப் பிடிவாதக் குண எப்படிப் புரையோடிக் கிடந்தது? நான் கற்பிக்கும் அதே பாடசாலைக்கு நீயும் மாறி வர வேண்டுமென்று ஒற்றைக்காலிலே நின்றாய். கணவனும் மனைவியும் ஒரே பாடசாலையிலே கற்பிப்பதிலே ஏற்படுஞ் சிரமங்களை விளக்கினேன். அன்பு குறையுமென்று கூடச் சொன்னேன்.

''நான் குரங்கு, எப்படிக் கொண்டு போய் மாணவர்கள் முன்னால் நிறுத்துவது என்று சொல்லுங்கோ?'' என்று என் நியாயப் பேச்சு முழுவதையும் உன் குதர்க்கப் பேச்சுக்களினால் முறியடித்தாய். இறுதியில் வெற்றி உனதே.

ஒன்றாகவே பாடசாலையிலும், வீட்டிலும், இருபத்தி நான்கு மணிநேரமும் விட்டுப் பிரியாதே உதிர்ந்த அந்த நாட்கள்......

''கல்யாணம் முடிச்சு மூண்டு வருஷம். இன்னும், தேனிலவுத் தம்பதிகள் தான்'' என்று வெற்றிலைத் துப்பல் தாடைவரை வழிய அழகையா வாத்தியார் சொல்லுவார். க்ஷயரோக இருமல் புரையோடக் குலுங்கிச் சிரித்து அதற்கு ஒத்தூதுவார் பண்டிதர் விஸ்வலிங்கம்.

மூன்று ஆண்டுகள்- ஆயிரம் நாட்கள்- இவ்வளவு சீக்கிரம் உருண்டோடி விட்டனவா? உன் அம்மா தன் பேரப்பிள்ளையைக்காணத் துடிப்பதாக நீ தெரிவித்தாய். கள்ளி, அந்தப் பிள்ளையை எப்படியும் பெறவேண்டுமென்ற விரத அனுஷ்டானங்களிலே அக்கறைகாட்டுகிறாய். விடுமுறை தோறும் ஒவ்வொரு புண்ணிய ஸ்தலமாகப் பிள்ளை வரம் வேண்டி யாத்திரை. செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரை; கீரிமலையிலிருந்து சிவனொளிபாதம்வரை எந்த ஸ்தலத்தினையும் பாக்கி வைக்கவில்லை.

கல்யாணி, உன் நோன்பு வீண் போகவில்லை. நீ கர்ப்பவதியாக இருந்த காலத்தைப் பசுமையாக நினைக்க முடிகின்றது. தாய்மையின் பூரணத்துவத்துடன் உன் அழகு, சுந்தரப் பொய்கையிலே மிதக்கின்றது. மசக்கை ஆசைகள் பண்பாட்டினையும் எகிறி நிற்கின்றன. பெண்களால் இரகசியத்தினைக் காப்பாற்றி வைக்க முடியாது என்பதற்கு நீதானும் விதிவிலக்கல்லள். ஒருநாள், ஆசிரியர் அறையிலிருந்து நீ மாங்காய்ப் பிஞ்சுகள் தின்ற செய்தி, அன்று முழுவதும் பாடசாலையிற் பரவ, 'கொங்கிராஜுலேசன்' என்று எல்லோரும் என்னை ஊமை இன்பத்திற்குள் அமிழ்த்தி விட்டனர். அவர்களது கேலிப் பேச்சுக்களிலேயே நான் திணறிக் கொண்டிருக்க, நீ மட்டும் அன்றலர்ந்த மலரின் மலர்ச்சியினால் உன் முகத்தை நிரப்பிக் கொண்டு, மொட்டின் இதழ்களைப் பூட்டவிழ்க்கும் இரகசியமே அம்பலமாகும் குறுநகை அரும்புகின்றாய். அதனைத் தலை கவிழ்ந்து நிலத்திலே உதிர்த்தலுக்குப் பெயர்தான் நாணமா?

''நீங்கள்தானே மயில்வாகனம்?'' வேறொரு 'நேர்ஸ்' வந்து என்னைக் கேட்கின்றாள். உணர்ச்சி

27-ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் அகதிமுகாம் 4

நவம்

சென்னைக்கே உரித்தான 'கோபச்சூரியன்' முகம் காட்டத் தொடங்கியிராத ஒரு காலைப் பொழுது. அறுவர் அடங்கிய ஒரு மருத்துவக் குழு, செங்கை அண்ணா மாவட்டத்திலுள்ள, 'சாலவன்குப்பம்','நெம்மேலி','கோவளம்', 'முட்டுக்காடு' ஆகிய நான்கு முகாம்களுக்கும் தன் பயணத்தை மேற்கொண்டது. சென்னையிலுள்ள 'ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம்' இதனை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த 4 முகாம்களுக்கும் ஒரு விசேஷம். இவை நான்கும் தமிழ்நாடு, சுற்றுலா மையத்தில் அமைந்திருந்தன. சாலவன் குப்பம் நெம்மேலி இரண்டும் சிவகாமியின் சபதம் புகழ் 'ஆயனச் சிற்பி' வாழ்ந்த மகாபலிபுரத்தை அண்டியும், 'கோவளம் முகாம்' புகழ் பெற்ற சுற்றுல்லா கடலோரத்திலுள்ள 'கோவளத்திலும், முட்டுக்காடு முகாம் முதலைப் பண்ணையால் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொண்டிருக்கும் முட்டுக்காட்டிலும் அமைந்துள்ளன.

டாக்டர்கள் திரு எஸ்.சீவரத்தினமும், திரு. கே. செல்லத்தம்பியும் மருத்துவக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்றனர். அவர்கள் கூட நான்கு உதவியாளர்கள்.

டாக்டர் சீவரத்தினம், தமிழ் நாட்டு அரசால் 1984-ம் ஆண்டு ஈழ அகதிகளுக்காக 20 பேருக்கு வழங்கப்பட்ட மருத்துவக் கல்வி இட ஒதுக்கீட்டின் கீழ், செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் பயின்று, 1990-ம் ஆண்டு வைத்தியப் பட்டம் பெற்றவர்! தற்போது இவர் சென்னையிலுள்ள அரசு சிறுவர் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகின்றார். இலங்கையைச் சேர்ந்தவர். திரு. செல்லத்தம்பியும் இலங்கையைச் சேர்ந்த ஒரு டாக்டராகும். இருவருமே தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்தவர்கள்!

சென்னையை அடுத்த திருவான்மியூரில் காலை உணவை முடித்துக் கொண்டு குழுவினர் முதலில் 'சாலவன் குப்பம்' அகதி முகாமை நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தனர். அகதிகளுக்குரிய மருந்து மாத்திரைப் பொட்டலங்களோடு கார், மகாபலிபுரம் பாதையில் விரைந்து கொண்டிருந்தது.

பாதையின் இடது புறம் விரிந்து பரந்த தங்கக் கடலும், தலை அசைக்கும் சவுக்குத் தோப்புகளும், வலது புறம் மரமுந்திரிகைகளும், தலை அசையா பனைகளும்!

பாதையில் விரையும் வாகனங்களை லாவகமாய் மறித்து, முந்திரியம் பழங்களை செலாவணியாக்கிக் கொண்டிருந்தனர் உள்ளூர் சிறுவர் சிறுமியர்.

சுமார் 55 கிலோ மீட்டர் பயணித்து 'சாலவன் குப்பம்' சேர்ந்தோம். அப்போது சூரியனின் முகம் சற்று சிவந்து 'கோபம்' காட்டத் தொடங்கியிருந்தான்.

மாமல்லபுரத்திலிருந்து சுமார் 2½ மைல் தூரத்திலுள்ள இம்முகாமில், 52 குடும்பங்கள் தங்க வைக்கப் பட்டிருந்தனர். ஆண்கள் 50. பெண்கள் 51. குழந்தைகள் சுமார் 60. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களைத் தவிர, ஏனையோர் அனைவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள். தலைக்கு 400 ரூபா முதல் 800 ரூபா வரை செலுத்தி வள்ளம் மூலம் 1990 ஜூலையில் இராமேஸ்வரம் கடற்கரையில் ஒதுங்கியவர்கள்!

சாலவன் குப்பத்தில் கடலோரம் அமைந்துள்ள 'புயல் பாதுகாப்பு' இல்லத்தில் இவர்கள் அனைவரும் குடியமர்த்தப் பட்டிருந்தனர். இடவசதியை முன்னிட்டு 14 குடும்பங்கள் ஓலைக் கொட்டில்களில் அமர்த்தப் பட்டிருந்தனர். மகாபலிபுரம் கிறிஸ்தவர் கோயில் பங்குத் தந்தையால் 10 கொட்டில்களும், ஏனையவற்றை அகதிகள் தங்கள் சொந்த முயற்சியிலும் கட்டியிருந்தனர். 'புயல் பாதுகாப்பு' இல்லத்தில் குடியிருப்போர், துணிமணிகளால் சுவர்அமைத்து குடும்பம் குடும்பமாய் வாழ்கின்றார்கள். கடல் காற்றுக்கு அசையும் அந்த துணிச் சுவர் போல், அவர்களது வாழ்க்கையும் ஆடிக் கொண்டிருக்கின்றது!

அகதிகளுக்கென்று இங்கு ஓர் அமைப்பு இயங்குகின்றது. அதன் தலைவராக திரு. ம. முடியப்பு குலாஸூம்; செயலாளராக

## செங்கல்பட்டு அண்ணா மாவட்டம் சாலவன்குப்பம்



படிப்பகம்

www.padippakam.com


**For All Your Financial Planing & Insurance Needs**

**SARABJIT SINGH PAUL** B.Sc. (Engineering)

- Super Annuation
- Life Insurance
- Children's Education & Savings Plan
- Roll Overs
- Insurance Bonds
- Home, Contents, Cars & Commercial Insurances

**NATIONAL MUTUAL**

**47, Princes Highway, Dandenong, VIC 3175**
**Telephone :(03) 791 2955 Private (03) 792 9074**


திரு. மைக்கேல் லம்பர்ட்டும்; நிதியாளராக திரு. ஏ. தியாகரா ஜாவும் மிகுந்த உற்சாகத்தோடு பணி புரிகின்றார்கள்.

அவர்களை அணுகியபோது பின் வரும் தகவல்கள் கிடைத் தன.

(அ) தண்ணீர் வசதி மிகவும் கஷ்டம். குளிப்பதற்கு ஒரு கிணறு மட்டுமே உண்டு. ஆயி னும் அதில் தண்ணீர் இல்லை. குடி தண்ணீருக்கு இரண்டு குழாய்க் கிணறுகள் உண்டு. அவற்றில் ஒன்று மட்டுமே பா வினையில் உள்ளது. மற்றது அடிக்கடி பழுதடைந்து விடு கின்றது. தற்போது, குடிப்பது, குளிப்பது, அந்த ஒரு குழாய்க் கிணற்றில் மட்டுமே!

(ஆ) மலசல கூடம் இரண்டு உண்டு. சுற்றி வர கிடுகுகளால் கட்டப் பட்டிருக்கின்றது. ஆயி னும் அங்கு வீசும் பலத்த கடற் காற்றினால் அவை சேத முறுவ தால், அகதிகள் - குறிப்பாக பெண்கள் மிகவும் சிரமப்படு கின்றார்கள்.

(இ) சமையல் செய்ய எரிபொருள் இல்லாக் கஷ்டம். மாதம் ஒரு முறை வழங்கப்படும் 3 லிட்டர் மண்ணெண்ணெய் போதாது. விறகு கிடைப்பதும் மிகக் கஷ்டம். 15 கி. மீட்டர் தொலைவிலுள்ள திருப்பூர் சென்றே விறகு சேகரிக்க வேண் டியுள்ளது.

(ஈ) கல்வி : G.C.E (A/L) G.C.E. (O/L)வகுப்புகள் படித்த 7 மாணவர்கள் உள்ளனர். இவர் களுக்கு படிப்பைத் தொடர ஆர் வம் இருந்தும் அதற்கான வசதி கள் இல்லை.

பாலர் வகுப்புக்கள், இம் முகாமில் தங்கியுள்ள அகதி ஆசிரியர்களால் நடாத்தப்படு கின்றன. 5-ம் வகுப்புக்கு மேற் பட்ட மாணவர்கள், சுமார் 19 கி. மீ. தொலைவிலுள்ள திருப் பூர் ஊராட்சி ஒன்றிய தொடக் கப் பள்ளியில் படிக்கின்றனர். இரண்டு மாணவிகள் இங்கேயே விடுதியில் தங்கிப் படிக்கின்றார் கள். சுமார் 10 பேர், $2\frac{1}{2}$ மைல் தொலைவிலுள்ள மகாபலிபுரம் சென்று கல்வியைத் தொடர்கின் றார்கள்.

(உ) மருத்துவம்: OfERR மூலம் மருத்துவ வசதிகள் வழங் கப்படுகின்றன. ஆயினும் இது மேலும் அதிகரிக்கப்பட வேண் டும். முகாமில் இயங்கும் மருத் துவ கூடத்துக்கு மேலும் வசதி கள் தேவை. திரு. ஸ்பெரடி லம் பேர்ட் என்பவர் மருத்துவ வசதி களைக் கவனித்து வருகின்றனர்.

முகாமுக்கு வந்த மருத்துவ குழுவினர் அகதிகளுக்கு வேண் டிய மருத்துவ உதவிகளை ஒழுங் காகவும் ,உற்சாகமாகவும் பரி வோடு செய்து முடித்தது மன துக்கு ஆறுதல் தந்தது. முகாமை விட்டு புறப்படும் போது, சூரி யன் கோபம் கொள்ளத் தொ டங்கியிருந்தான்.

□

www.padippakam.com

சந்திரிகா ரஞ்சன்



# ஒவா

1974-ம் ஆண்டு போர்த்துக்கல் தேசத்தில் இராணுவம் தாங்கிய புரட்சி பாசிச ஆட்சியை அறுத்தது. டி. மில்கெய்ரா குடும்பத்தின் வசந்த காலத்தை யும் முடித்தது. லிஸ்பனிலிருந்து 500 கி.மீ.தூரத்திலுள்ள 'ஆத்தலயா' என்ற கிராமத்திற்கு வருகை தருகின்ற நூற்றுக்கும் மேற்பட்ட அரச விருந்தினர்களை ஓரே நேரத்தில் தங்க வைத்து பெருமை கொண்ட அவரது வீடு அவர் கண் முன்னாலேயே எரிக்கப் பட்டது. அங்கிருந்த யன்னல்களின் எண்ணிக்கை முன்னூற்று நாற்பது என்று இன்றும் அயலவர்கள் கணக்கு சொல்லுவார்கள். நானூறு வருட பழைமை பேசும் மாளிகையின் Ruins அவர் இதயத்தை கிளறும் நினைவுச் சின்னமாக இன்று பேணப்படுகின்றது. ஆனால், நோய்வாய்ப் பட்ட மில்கெய்ரா மட்டும் எழும்ப முடியாமல் படுத்த படுக்கையாகி விட்டார். வைத்தியர்களின் இறுதிக் கண்டுபிடிப்பு. நுரையீரலில் கான்சர் என்பது! போத்துக்களில் இனி இழப்பதற்கு வக்கிரமான உறவினர்களின் இதயங்கள் மட்டும்தான் இருக்கின்ற நிலையில் அவரது ஒரே மகன் றொனி அவுஸ்ரேலியாவில் குடியேறிவிட்டான். இஃது அவனுடைய அறிமுகத்திற்கு ஒரு முன்னீடு.

☐ ☐ ☐

பதினைந்து வருடங்களுக்கு முன்னர் சிட்னிவாசியாகிவிட்ட றொனிக்கும், அண்மையில் இங்கு குடிபெயர்ந்த எனக்கும் இடையிலான சில அனுபவங்களே இனி.

அந்த அலுவலகத்தில் நான் ஒருவனே வெள்ளையன் அல்லாதவன். இதில் ஓர் அனுகூலம் உண்டு. கண்ணுக்கு தெரிபவர்கள் எல்லாம் வெள்ளைத்தோலினராதலால் நான் மாற்றினத்தவன் என்பது மறந்து போய்விடுகிறது. இந்த நினைப்பு தோன்றும் படியாக எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை.

சொந்த நாட்டு பிரச்சினைகளை அந்நியனுக்குச் சொல்லி ஆறும் ஏக்கம் எனக்கும் ஆரம்ப நாள்களில் நிரம்ப இருந்தது. என்னை அறிவதில் எந்த ஆர்வமும் இல்லாமல் இருக்கின்றார்களே என்ற ஆதங்கமே எஞ்சியது. அருகில் உள்ளவர்களின் அந்தரங்கங்களை அறிவதில் ஒருவருக்கும் அக்கறையில்லை. பல நிறங்களைப் பார்த்து அலுத்து விறைத்த கட்டைகள். திங்கள் காலையில் வேலை தொடங்கும்போதே வெள்ளி மாலையை நினைந்து, அந்த நினைவில் நுகும்பும் உற்சாகத்தில் வேலை செய்பவர்கள். வேலை எது இவர்கள் எது என்று பிரித்துப் பார்க்க முடியாத அத்வைதிகள்.

இசைவாக்கம் பலித்தது. இவர்களைப் போல நானும் வேலையாக மாறிக் கொண்டு இருந்த காலத்திலேதான் றொனி இந்தக் கந்தோரில் வேலைக்குச் சேர்ந்தான். என்னிலும் இளையவன். உருவத்திலும் சின்னவன். வெள்ளையர்களுக்குரிய சராசரி தோற்றம் கூட இல்லை. நேர்த்தியாகவும் ஆடம்பரமாகவும் உடுத்திக் கொள்வதால் அதைச் சரிக்கட்டிக் கொள்ளலாம் என்று நினைப்பவன். அவன் வந்த பிறகுதான் கொம்பியூட்டரிலும் கொஞ்சம் மனித வாடை வீசத் தொடங்கியது. அவனுடைய அடி நாபியிலிருந்து வரும் ஆங்கில உச்சரிப்பு விளங்காது. ஆனால் ரசிக்கக் கூடியதாக இருக்கும்.

காலையில் வரும்போதே, ஏதாவதொன்றைப் பற்றி குறை கூறி அலுத்துக் கொள்ளாவிட்டால், றொனியால் திருப்தியாக வேலையைத் துவங்க ஏலாது. அப்படி ஒரு வாடிக்கை. கீழ் unit இல் வசிக்கும் கிழவி, அவுஸ்ரேலியாவின் நிதியமைச்சர் போல் கீற்றிங், பின்னால் வந்த காரின்

24-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

# நான் உன்னைத் தேடுகிறேன்

**12** சுந்தா & எஸ். சிவாஜி தற்போது மெல்பேர்னில் வசிப்பவரும், யாழ்ப்பாணம்-கொட்டடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 'நியாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்' (யாழ்ப்பாணம்) திரு நியாஸ், கொட்டடியைச் சேர்ந்த பிரபல எண்சோதிடர் மார்க்கண்டுவின் மகன் சுந்தா அவர்களையும், யாழ்ப்பாணம் மாட்டின் றோட்டைச் சேர்ந்த எஸ் சிவாஜி என்பவரையும் கடந்த எட்டு வருடங்களாகத் தேடுகிறார். சுந்தா மேற்கு ஜேர்மனியிலும், சிவாஜி லண்டனிலும் வசிக்கலாம் என்று நம்புகிறார். இவர்களை அறிந்த மேற்கு ஜேர்மன், லண்டன் வாசகர்கள் இவர்களுடைய தற்போதைய முகவரியை அறியத் தருவார்களா?

□

**13** என் இனிய சத்தியகுமார், இருவரும் உரும்பிராயில் பிறந்தோம். நீ மத்திய கல்லூரியிலும், நான் இந்துக் கல்லூரியிலும் படித்த போதிலும், கோண்டாவில் திரு ரியூஷன் சென்டரில் ஒன்றாகப் படித்த காலத்தைப் பசுமையாக நினைவு கூருகின்றேன். லண்டனிலிருந்து நீ அனுப்பிய கடிதத்தினை, தாயகத்தில் நடைபெறும் கெடுபிடிகள் மத்தியிலே தொலைத்து விட்டேன். நான் இப்பொழுது சிட்னியில் பல்கலைக் கழகப் படிப்பினை மேற் கொண்டுள்ளேன். உன்னுடன்தொடர்பு கொள்ளத் துடிக்கின்றேன். எங்கிருந்தாலும் தொடர்பு கொள்ளவும்.

**நிர்மலன்**

□

**14** காங்கேசன்துறை-ஊறணியைப் பிறப்பிடமாகக் கொண்ட அ. ஞானசீலன் (ஞானி) கொட்டடி மீனாட்சி கொமர்ஷல் ரியூட்டரியில் தன்னுடன் கல்வி பயின்ற, யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி றோட்டைச் சேர்ந்த ரெட்ணசிங்கம் ஜெயராஜா என்பவரைக் கடந்த 18 வருடங்களாகத் தேடுகிறார்: நண்பர் ஜெயராஜா மேற்கு ஜேர்மனியில் வசிக்கலாம் என்று நம்பும் ஞானசீலன் தற்போது மெல்பேர்னில் வசிக்கிறார்.

**15** □ ரூபி 'நான் உன்னைத்தேடுகின்றேன்' பகுதியில் (எண் 5) சுஜாதா நவரத்தினத்தை தேடினார். தனது சினேகிதியுடன் தொடர்பு கொண்டு மகிழும் சுஜாதா பின் வரும் கவிதையை நமக்கு அனுப்பியுள்ளார் :

'உன்னைத் தேடுகிறேன்' என்று
என்னைத் தேடிய இனிய ரூபியே
உரிமைப் போராட்டத்தில்
உறுதியோடு இன்று
உன்னவள் இங்கே!
இந்திய மண்ணில் அகதியா?
என ஏங்கிடுவதும் ஏனோ?
எந்த மண்ணும் எமக்கில்லை
சொந்த மண்ணே இனி எமக்கு
அன்பு ரூபியே
அந்நியர் அகன்றிடும்
இனிய பொழுதில்
மீண்டும் இந்த
மண்ணில் எங்கள்
அன்பு மலர்ந்திடும்
அதுவரை......
பதுங்கு குழிகள்
விழுங்கத் துடிக்கும்
எமது மக்களின்
துயரினை அறியத்
துடித்திடும் சஞ்சிகை
'அக்கினிக் குஞ்சு'
ஆறுதல் அளித்திடும்.

□

C/o AKKINI KUNCHU
P. O. BOX 470 MOORABBIN
VIC- 3189 AUSTRALIA

## ஈழத்துக் கல்வி வளர்ச்சி—7

1931-ம் ஆண்டில் டொனமூர்த் திட்டம் அமுலுக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ் மட்டுப்படுத்தப்பட்ட சுய ஆட்சி கிடைத்தது. புதிய சூழலுக்கேற்பக் கல்விச் சட்டமும் மாற்றி அமைக்கப்படல் வேண்டும் என்கிற எண்ணம் வலுத்து, இதற்கான புதிய மசோதாவும் தயாரிக்கப்பட்டது. அந்த மசோதா 1939-ம் ஆண்டில், கல்விச் சட்டம் எண் 31 என்ற பெயரில் நிறைவேறிற்று. இச்சட்டத்தில் 1939, 1945, 1946, 1947, 1951 1953-ம் ஆண்டுகளிலே பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

இச்சட்டத்தின் கீழ் ஏற்பட்ட பிரதான, மாற்றங்கள் வருமாறு :

அ. கல்விச்சபை, ஆலோசனைச் சபையாக மாற்றியமைக்கப்பட்டது.

ஆ. சட்டங்கள் இயற்றும் அதிகாரம் சட்டசபையின் நிருவாகக் குழுவுக்கு அளிக்கப்பட்டது

1947-ம் ஆண்டில் நிறைவேறிய திருத்தச் சட்டம் எண் : 26-ம் முக்கியமானது. இதன் மூலம் பரீட்சை சபை, கல்வி ஆராய்ச்சிச் சபை ஆகியன நிறுவப்படுவதற்கு வசதியளிக்கப்பட்டது.

-கல்விமான்



படிப்பகம்

-தொடர் கவிதை

# இரண்டு உலகம்

-கவிஞர் அம்பி
பப்புவா நியுகினி

**குறிகளில்** நிறைவு கண்டும்
குளிர்வுசந் தனத்திற் கண்டும்
மறைவழி தனதே என்றும்
மதிவழி தனதே என்றும்
குறைநிறை பலர்க்குச் சொல்லி
குத்தலாய்க் கதைகள் சொல்லி
நெறிவளர் ஆசான் என்று
நிமிர்ந்தவர் உலக மொன்றில்

☐

ஈர்த்தது கண்ணை இன்றிவ்
வுலகிலே அன்னாற் கோலம்
பார்த்த அக் கணமே மெல்லப்
பார்வையை எடுத்துக் கொண்டேன்
வேர்த்ததென் மேனி சுங்கான்
விடுவிடென் றாடி ஓய்
ஆர்த்தது கவிதை நெஞ்சில்
அவரை நான் பார்த்த போது!

☐

நீண்டகாற் சட்டை மாட்டி
நிறைவுற ரையுங் கட்டி
ஆண்டவா என்ன மாற்றம்
ஆவென அசந்து நின்றேன்
தூண்டிலில் மீன்போல் மேளைத்
தொடர்ந்தவர் புலம் பெயர்ந்த
காண்டமோர் கதையைச் சொல்ல
கண்டெனைக் கட்டிக் கொண்டார்.

☐

செப்பமாய் இறுகப் பற்றிச்
சிறிதுகண் கலங்கிப் பின்னர்
எப்படா வந்தாய் தம்பீ
எங்குநீ இப்போ வேலை
கொப்பரைப் போல ஆமாம்
கொப்பரே தானுன் கோலம்
இப்படிப் பலதைச் சொல்லி
என்பதில் பார்த்து நின்றார்.

☐

நின்றவர் கண்ணில் மீண்டும்
நிறைந்தது கண்ணீர் மெல்லச்
சென்றவர் கையைப் பற்றிச்
சேர்ந்தொரு புறத்தே நின்றோம்
கொன்றுகொன் றழுத்தி நெஞ்சில்
கொதித்ததைக் கொட்டித் தீர்த்தோம்
அன்றைய நினைவில் மாயும்
அகநிலை அளந்து பார்த்தோம்.

☐

பெரியவள் புருஷன் அன்று
**பிஆரை** எடுத்துத் தந்தார்
சரியென நானும் வந்தேன்
சங்கிலி விலங்கு தம்பி
திருவிழாச் செய்தும் கோயில்
திருப்பணி செய்தும் வாழ்ந்த
நிகரிலா வாழ்க்கை நெஞ்சில்
நிறைசுமை என்ன செய்வேன்

☐

என்றவர் பெருமூச் சோடே
என்னையே பார்த்து நின்றார்
நின்றவர் மனதை நெஞ்சில்
நிறுத்துநான் எடையைப் பார்த்தேன்
துன்புறு மனதில் நானும்
தூபமேன் இடுவான் என்றே
இன்றுநாம் அங்கி ருந்தும்
என்னதான் காண்போம் என்றேன்.

☐

என்னதான் காண்போம் என்றென்
இதயமும் அழியுந் தம்பி
முன்னைநாள் வளர்ந்த சூழல்
முறைவழி வாழ்ந்த வாழ்வென்
பின்னைய கால வாழ்வு
பிறந்தக நினைவு......தம்பி......
அன்னையே ஆச்சி என்றே
அழுதிடத் தோன்றும், ஈசா!

☐

கலங்கின கண்கள் மீண்டும்
கடவுளே இறைவா என்றார்
புலம்பெயர்ந் திங்கே வந்தோம்
புதியதோர் சூழல் மாஸ்டர்
நலன் பெற வேண்டின் நெஞ்சம்
நலிவுறல் முறையா......என்று
பலகதை பேசிக் கொண்டே
பாதையில் நடந்து சென்றோம்.



☐ (வேறு) ☐

பாதையிலே பழையகதை
புதியகதை பேசிப்
பலவாக இரண்டுலகப்
பழுவகைகள் ஆய்ந்தோம்

நடைபாதை வழியாக
நடைபோட்டுக் கொண்டே
நல்லதையும் அல்லதையும்
நாமாயும் பொழுதில்

சாதிமத இனபேதஞ்
சல்லரித்துப் பூமி
தலைசாய்ந்த பழம்பெருமை
சகலதையும் ஆய்ந்தோம்

கு டே என்ற குரல்கேட்டு
கூர்ந்தங்கு பார்த்தோம்
கொஞ்சுமுக நகையோடு
கிழமொன்று நின்றாள்.

-தொடரும்



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்த் தாகம்

**புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய தமிழ்த் தாகத்தின் சின்னமாக நாம் புகுந்த நாடுகளிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் பற்றிய அறிமுகம் இந்தப் பகுதியிலே இடம் பெறும். சகோதர சஞ்சிகைகளின் முயற்சிகளுக்கும் வளர்ச்சிகளுக்கும் 'அக்கினிக் குஞ்சு'வின் ஆசியும் ஆதரவும் என்றும் உண்டு.**

ஆ-ர்

## கனடாவிலிருந்து : காலம்

ஆசிரியர் : **செல்வம்** இணையாசிரியர் : **ஆனந்த பிரசாத்**

வெளியீட்டாளர் முகவரி : **K.V. MOORTHY**

**711.KENNEDY ROAD 209 SCARBORO TORONTO CANADA**

**நமது** தமிழ்த் தாகத்தின் சின்னமாக **காலம்** என்னும் (TAMIL QUARTERLY) சஞ்சிகை கனடாவிலிருந்து வெளி வருகின்றது. இரண்டாம் இதழ் கிடைக்கப் பெற்றோம். இஃது ஒரு கனதியான சஞ்சிகை, தரமான விஷயங்களைப் பொறுப்பாகத் தெரிவு செய்துள்ளார்கள். இந்தியாவில் அச்சிடப்படுகின்றது. தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'சிறு பத்திரிகை'களின் தோற்றத்தைப் புனைந்துள்ளது.

புதிய நாடுகளிலே வாழும் தமிழர்களுக்கு முக்கிய பொழுது போக்கு வீடியோ பார்ப்பது. தமிழ் நாட்டு அரசியலைப் போலவே, தமிழ் சினிமாவும் குஷ்டரோகி ஆகி விட்டது போலும்! இவ்வாறு அமைதி கண்டு, ஜி. அரவிந்தனின் மலையாளப்படங்களிலே சுடர்விடும் கலைத்துவம் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அடூர் கோபால கிருஷ்ணனின் 'முகாமுகம்' பற்றிய சினிமா விமர்சனமும் இடம் பெற்றுள்ளது. LONG TIME COMPANION என்கிற பெருஞ் சர்ச்சையைக் கிளப்பியுள்ள திரைப்படம் வெளிவந்த பின்னணி பற்றிய கட்டுரையும் உண்டு. 'இலங்கை கிராமியப் பொருளாதாரத்தின் நெருக்கடிகள்' என்கிற சரத் பர்னாந்துவின் கட்டுரை, இளைஞருடைய போராட்ட எழுச்சிகளைக் கிராமியப் பொருளாதாரச் சீரணங்களுடன் தொடர்புபடுத்தி ஆராய்கின்றது. சமயவேல் விக்ரமாதித்யன், பாமதிரவி, யாழினி, ஆனந்த பிரசாத் ஆகியோருடைய கவிதைகள் பல உள. மரபுகளை நெகிழ்த்தும் புதுக் கவிதைக் கோலங் காட்டும் அவற்றுட் சிலவற்றிலேனும் சங்கதிகளும் நன்கு இணைந்துள்ளன. கோபி கிருஷ்ணனின் 'கடவுளின் கடந்தகாலம்,' ஆரூரனின் ஆறாம் நாள் ஆகிய இரண்டு சிறுகதைகளும் சிறு பத்திரிகைகள் வளர்ப்பதில் சிரத்தை ஊன்றியுள்ள சங்கதிகளையும் கோலங்களையும் அச்சாவாக உள்வாக்கினவாக அமைகின்றன. சிருஷ்டியாளரின் சுயதிருப்திகள் அழுத்தம் பெற்றுள்ளன போலவும் தோற்றமளிக்கின்றன.

கனடாவில் புலம் பெயர்ந்து வாழ்வோரைத் தரிசிக்கக்கூடிய விடயங்களும் இடம் பெற்றுள்ளன. வசந்தாவின் ஊழியம் சாதனையாக ஏத்தப்பட்டுள்ளது. கொஞ்சம் 'கையைக் காலை ஆட்டத் தெரிந்தவர்கள்' புலம் பெயர்ந்த நாடுகளில் நடனப் பள்ளிகள் துவங்கி 'பிஸினஸ்' பண்ணுகிறார்கள். அவர்களுடைய பணிகளின் படுதாவிலும் வசந்தா சாதனையாளரே. 'கார்கோடன் குறிப்புகள்' கனடாவில் வாழும் ஈழத்தமிழர் சமாச்சாரங்களையும் அவை தொற்றிய நியாங்களையும் செய்தி விமர்சனம் போன்று தருகின்றது. கனடாவில் குடியேறியுள்ள தமிழர்கள் ஒரு சாராருடைய அவல வாழ்க்கை வெளி உலகத்திற்குத் தெரியாது. ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம்! அது பாலா? விஷமா? 'கனடாத் தமிழரும் கனவுகளும்' என்னும் குமார் மூர்த்தியின் கட்டுரை சுவையானதும், அதே சமயம் சோகமானதுமான பிரச்சினைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றது. 'காலம்' இரண்டாம் இதழுக்கு வைரம் பதித்தது போல அமைவது சரண்யா எழுதியுள்ள 'நாட்குறிப்பு' என்னும் சிறுகதை. புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுடைய இலக்கியப் படையல்களைப் தேடி அலைபவர்களுக்கு நல்ல விருந்து. புதிய படுதாவிலே நமது நிகழ்வுகள் தீட்டப்படுகின்றன. அவலம் மண்டிய சோகத்தையும் நேர்த்தியான நகைச் சுவையையும் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னியிருப்பதிலே இச் சிறுகதையிற் கலைத்துவம் மிளிர்கின்றது. சங்கதியும் கோலமும், கருவும் உருவும் முழுமை காணும் கலைப் படைப்பு. மனதில் நின்று நிலவும். சரண்யா புதிய கதைஞர் வரிசையிலே நிரந்தர இடம் பெறவல்ல 'சித்து'களை இக் கதையிலே வெளிப்படுத்தியுள்ளார்.

-வெள்ளங்காடு
**வீ. வியாகேச தேசிகர்**

---

சிந்தனை :

**தீர்க்க ஆலோசனையுள்ளவன், ஒரு பிரச்சினையைக் குறித்து இது சரியா, பிழையா' என்று மட்டுந்தான் ஆராய்கிறான். ஆழமில்லாத போலியானவனோ, 'இது முற்போக்கா-பிற்போக்கா, ஜனநாயகமா-சர்வாதிகாரமா' என்றெல்லாம் கேட்கிறான்.**



படிப்பகம்

www.padippakam.com

# அனலும் மனமும்

'உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில்லை 'சுத்து'க்கு உண்டு - என்று 'குறள்' ஒன்று இணக்கியபடி, தன் கைப்படவே சுத்தியெடுத்த தாவடிப் புகையிலைச் சுத்தினைப் பற்ற வைத்தார். 'சோக்கா இருக்குது...' என்ற உணர்வுகளிலே மிதக்கலானார், மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர். அவருடைய சுதியைக் குலைப்பது போல அரவம் கேட்கவே, கொட்டிலுக்கு வெளியால் எட்டிப் பார்த்தார். மேளம் ஐயாத்துரை வந்து கொண்டிருப்பது தெரிந்தது. கறுவல் குத்தியன். ஒண்டரை இஞ்சி பிரஷ் போலை, மூக்கின் அகலத்தை அளந்து வைச்ச மீசை. விபூதிப் படையும், பற்களும் மட்டுமே படு வெள்ளை. வலக் காதிலே வைத்திருந்த செவ்வரத்தம் பூவுக்கு மேலாலை, மறந்து போய்ப்பூசின சுண்ணாம்பு போல இலேசான நரை. இன்டைக்குப் பார்க்க வாறது எண்டு அவன் அனுப்பியிருந்த விசளம் இப்பொழுதுதான் கொ. சு.வின் மண்டையில் உறைத்தது.

'மேளம் ஐயாத்துரை யல்லே?... வாரும், வாரும்... உந்த ஸ்டுலிலை இரும். கொழும்புப் புதினங்கள் எப்பிடி?'

'உங்கடை புதினந்தான் எழுத்தாளர் மத்தியிலை அடிபடுது!.. முற்போக்குக்காரரை நீங்கள் சொறியப் பாத்தியளாம். அந்தனி ஜீவாவைப் புடிச்சு முறையான ஒட்டல் சாப்பாடு தந்திட்டனமாம்... தினகரனிலை அறுசுவையிலை உங்களுக்குக் கலாதியான சாப்பாடாம்...'

'ஓமோம். செமிக்குதிலை எண்டுதான் சுத்துக் குடிக்கிறன்... இஞ்சை பார் ஐயாத்துரை, இரண்டு சின்னப் பொடியள் கல்லெறிஞ்சாத்தான் மரம் காய்ச்சிருக்கு எண்டு நாலு பேருக்கு விளப்பமாத் தெரியும்... உந்த ஆனாமான முற்போக்குக் காரரர், உந்த உசுக்குட்டியன் அந்தனி ஜீவாவை எங்கை கண்டு பிடிச்சவை?'

'கூலிக்கு மாரடிக்கிறதிலை, உவன் அப்பனான Professional எண்டுதான் நான் கேள்வி?'

'முழுக்கதையும் கேளுமன். 'உவன் அறுவான் அந்தனி ஜீவா எண்டு பேர்வைச்சுத் திரியறான். உந்தத் தோட்டக் காட்டானை என்ரை தம்பி எண்டல்லோ நினைக்கப் போகினம்' எண்டு ஆரியகுளமும் வண்ணான் குளமும் நிரம்பி வழிய டொமினிக் ஜீவா குளறிக் கொண்டிருந்த காலத்திலையே எனக்கு உந்த அந்தனியைத் தெரியும். பாவம், அந்தப்பொடியனும், எழுத்திலை முன்னுக்கு வரவேணும் எண்டு முதலிலை மனசார நினைச்ச வங்களிலை இந்தச் சுப்பனும் ஒருத்தன்! பேய்க்குப் படிச்சால் தாய்க்குத்தானே ஏவிப் பாக்க வேணும்?... இன்னொரு முஸ்பாத்தியான சங்கதியையும் கேளும்... ஜெயகாந்தனிலை எனக்குப் புடிச்ச ஒரு விஷயம் இதுதான். அந்நாள், உந்த இலங்கை முற்போக்குகளைப் போல ஆசார Image ஒண்டு காவிக் கொண்டு திரிய துப்புரவாய் விரும்பிறேல்லை. நான் கஞ்சாப் புகைக்கிற பழக்கம் உள்ளவன் எண்டு தைரியமாக் குமுதத்திலை எழுதினதுதானே? நான் பாவிக்கிற நல்ல சாப்பாட்டை வந்த விருந்தாளிக்கும் offer பண்ணுறதுதான் நாகரிகம். உதுகூடத் தெரியாமல் 'அந்தனி ஜீவா ஜெயகாந்தனோடை சேர்ந்து கஞ்சா அடிச்சதினாலையல்லோ, என்னையும் கஞ்சா அடிக்கச் சொல்லி ஜெயகாந்தன் கேட்டவன்' எண்டு டொமினிக் மூக்காலை அழுததினாலை, கொஞ்சக் காலம் மல்லிகைப் பந்தலே நாறிக் கொண்டிருந்தது. இங்கினை ஆருக்குத் தெரியாது? இப்ப இந்த அந்தனியை விட்டால், கொண்டோடி சுப்பனுக்குக் கல்லெறிய முற்போக்கு அணியிலை ஒருத்தனுக்கும் வல்லமை இல்லை. ஏமாந்தவனாகப் பாத்து, நெருப்புக்கு முன்னாலை தள்ளி, நெருப்புக்குள்ளை பதமா வெந்த சுட்ட பிலாக் கொட்டை எடுத்துத் தின்றதிலை 'முற்போக்குக் காரன்கள்' வலு சூழியன்கள். அந்தனி ஏமலாந்தி! அவன் மலையகக் கலை - இலக்கியப் பேரவை ஒண்டு வைச்சுக் கருத்தரங்குகளும் நடத்தியும், மலையக வெளியீட்டகம் வைச்சு உருப்படியாகச் சில புத்தகங்கள் வெளியிட்டும் ஏதோ உருப்படியாய்ச் செய்து கொண்டிருந்தான். அவன் பாவம். மார்க்ஸ் முனிவருடைய திசையில் தலை வைச்சுப் படுக்குறதும் இல்லை. 'தலைவருக்குத் தலையும் செல்லச்சாமிக்கு வாலும் காட்டி' அந்த ஏழையை பிழைக்க விடுங்கோவன்... வஞ்சகமில்லாமல் இன்னொன்டையும் சொல்லத்தான் வேணும். அந்தனியை அப்புக்காத்தாகப் பிடிக்கிறது எண்டால், முற்போக்குக்காரரின் யாவாரம் எவ்வளவு படுத்துப் போச்சுது எண்டு விளங்கு

கொண்டோடி சுப்பர்



படிப்பகம்

www.padippakam.com

தல்லே?' நூர்ந்து போன சுத்தை கொ.சு. மூட்டினார்.

'ஏன் அண்ணை? அந்தனி சொன்னால் என்ன? யார் சொன்னால் என்ன? மெய்ப் பொருள் காண்பது அறிவு எண்டு தானே தமிழ் மறைசொல்லுது?' என்று வேண்டும் என்றே, மேளம் ஐயாத்துரை குசும்புத் தனமாகத் தமது இலக்கிய ஞானத்தை உரசிக் காட்டினார்.

'முதலிலை பொருள் இருக்க வேணும். பேந்துதான் மெய்ப் பொருள் காணலாம். சொந்த நாட்டை விட்டு ஓடிப்போனவங்கள் எல்லாம் சொகுசு வாழ்க்கை வாழுறாங்களோ? இவையள் முருகபூபதிக்கு - அவரும் அவுஸ்ரேலியாவிலைதானே வாழுறார் - எழுதிக் கேட்கலாமே எப்படிக் கொத்த சொகுசு வாழ்க்கை எண்டு! சொந்த மண்ணின் ஏக்கங்களுடன், பிள்ளைகளுக்கு நமது கலாசாரப் பாரம்பரியங்களை ஊட்ட முடியவில்லையே என்ற தவிப்புகளுடன், சமூக வாழ்க்கையை இழந்து விட்ட சோகத்துடன், பணம் உழைக்கும் மிஷின்களாக வாழ்றதும் ஒரு சொகுசு வாழ்க்கையே? வெட்கங் கெட்டவங்கள். உலக நடப்புத் தெரியாமல் கிணத்துக் குள்ளை வாழுற மாரித்தவளையள்!' - கொ. சு. பொரிந்து தள்ளினார்.

'தெரியாமல் கேட்கிறன்... 'அக்கினிக் குஞ்சை' ஏன தமிழ் நாட்டிலை அச்சடிக்க வேணும் எண்டு கேக்கிறதிலை என்ன தப்பு?...'

'உதுதான் ஆகிலும் பீத்தல் கதை... இலங்கையிலை ஆக்க இலக்கியத் துறையிலை புத்தகங்கள் பிரசுரிப்பதில் ஒரு சாதனை செய்தவன் ரஹ்மான் எண்டதை யாராலை மறுக்க முடியும்? அச்சுக் கலையிலும் கெட்டிக்காரன். உந்த முற்போக்குகளும் சேர்ந்து தானே அவனுக்கு அள்ளி வெச்சவங்கள். புலம் பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களிலை இரண்டு இலட்சம்பேர் தமிழ் நாட்டிலை வாழுறாங்கள் எண்டதை மறந்து பேசாதையும். தங்களுக்கு வேண்டியவங்களின்ரை முதுகைச் சொறியிறதுதானே காலம் பூராகவும் முற்போக்குக்காரன்ரை இலக்கிய சேவை? எங்களுக்கு எழுத்துச் சுதந்திரம் உயிரைப் போல. பிரேமதாஸாவோட மோதின எத்தினை Journalist இருந்த இடம் இல்லாமல் போயிட்டாங்கள் எண்டு தெரியுமே? இந்த லிஸ்டிலை கடைசியாக் குருமூர்த்தியின்ரை பேர்...



இதோடை நிக்குமோ? பத்திரிகைச் சுதந்திரத்தை 'குஞ்சு' பாதுகாக்கும்... கணேசலிங்கத்துக்குக் கொழும்பிலை சொந்த அச்சகம் இருக்கு. அப்படி இருந்தும் ஏன் அவர் புத்தகங்களைத் தமிழ் நாட்டிலை பிரசுரிக்கிறார்? இன்னும் எத்தினைபேர்... ஏன், கனக்க? சொந்த மண்ணை விட்டு ஓடிப்போன அகஸ்தியர் ஏன் கிட்டடியிலை இரண்டு புத்தகங்களைத் தமிழகத்திலை பிரசுரித்தவர்? தெரியாமல் கேட்கிறன். ஏன்?'

'பாவம் அகத்தியர்... பிரான்ஸிலை புதியரத்தம்பாய்ச்சித்தானாம் இப்ப உயிரோடை இருக்கிறாராம்...'

'அப்பிடித்தான் மல்லிகைப் பந்தலிலை குடம் குடமாக் கண்ணீர் விட்டிருக்கினம். எதிரியாக இருந்தாலும் நீண்ட காலம்வாழ வேண்டும் எண்டு நினைக்கிறவன் இந்தச் சுப்பன். அது வேறை விஷயம், 'சுகமில்லாதவர்...அவர் கண்மூடுறதுக்கு முன்னாலை புத்தகங்களை வாங்கிக் கௌரவியுங்கோ...' எண்டு பிலாக்கணம் வைக்கிறது வலு சின்னத்தனம். இலக்கியவாதிக்குத் தன் எழுத்து ஆற்றலிலை ஓர் ஓர்மம் இருக்க வேணும்; வித்துவச் செருக்கு இருக்க வேணும்... கூழைக் கும்பிடு போட்டு, பத்திரிகைக் காரியாலயங்களிலை பழி கிடந்து எழுத்தாளனாகிப் பெயர் பண்ணுறது மிக அற்பத்தனம்... ''என்னைத் தோழர் எண்டு கூப்பிடக்கூடாது... என்னை ஐயா எண்டு கூப்பிட வேணும்... எஸ். ஏ. எண்டு கூப்பிட்டா வடிவாத் தெரியும்...'' எண்டு சில்லறைச் சேட்டையள் விடுறதாலையும் எழுத்திலை நயம் பூந்திட மாட்டுது... உதுகளின்ரை வண்டவாளம் எல்லாம் எனக்குத் தெரியும்... எனக்கு வாற விசரிலை... ஏலாக் காலத்திலை பிரிவிலிலை போற சைக்கிளைப் போல உதுகள் வாழ்ந்திட்டுப் போகட்டும் எண்டு பாக்கிறன்...'

'நீங்கள் சொல்லுறதும் உண்மைதான்... ''கனதியான இலக்கிய விமர்சகரான... கா. சிவத்தம்பி... கனத்த உடலைத் தூக்கிக் கொண்டு மாடிப்படி ஏறி வந்தார்...'' எண்டும் அந்தனி ஜீவா...'

'அதைத்தான் சொல்ல வந்தனான்... இதென்ன ஹிலரி மவுண்ட் எவரெஸ்டிலை ஏறின சாதனையோ?மெய்யாக் கேக்கிறன்... இது சிவத்தம்பி பற்றிய நக்கலோ, பெருமையோ?... சொற்களின் அர்த்தமே தெரியா



படிப்பகம்

www.padippakam.com

மல் எழுத்துலகிலை கூத்தடிக்கிறதைப் பாத்தால் விசர் வராதே. மனசார 'அறுபது கண்ட பிரேம்ஜி, என்ற செய்தியில் வாற சொற்களின் அர்த்தம் என்ன எண்டுதான் கேட்டனான்... முதலிலை அந்தச் சொற்கள் தமிழோ?இதிலை என்ன அரிப்பு? சில கூலிகளை வைச்சு முதுகு சொறிவிச்சதிலை சிலபேருக்கு முதுகும் புண்ணாப் போச்சுது...'

'அவங்களுக்கு முதுகு புண்ணாப் போச்சுது... சுரணை கெட்ட அவங்களைத் திட்டி இந்தாளுக்கு வாயும் புண்ணாப் போச்சுது... பேணிக்கை சீனியும் இல்லை; பணங் கட்டியும் இல்லை... உலையிலை கஞ்சி வடிச்சனான்... சூட்டோடை குடியுங்கோ...' என்று வக்கணை செல்லாச்சி இரண்டு கஞ்சி கிளாஸுகளை அவர்களிடம் நீட்டினாள். அந்த நேரம் பார்த்து கோவில் வளவுக் கனகம்மா படலையிலை நின்று குரல் கொடுத்தாள். 'பல பேரின்ரை தலை உருட்டுப்படுகுது போலை... குடிச்சிப்போட்டு இருந்து கதையுங்கோ... கறிப்பாடுகளைப் பாக்க அவளை அனுப்பினனான். என்ன புதினம் எண்டு பாப்பம்' என்று வ. செல்லாச்சி படலைப் பக்கமாக நடந்தாள்.

புழுங்கலரிசிச் சோத்து உலையிலை கஞ்சி வடிச்சு, கொக்கத்தடியாலை உடன் ஆய்ஞ்ச இளந் தென்னை தேங்காய்த் துருவலுடன், அளவாகச் சில சோற்றுப் பருக்கைகளும் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்து இடை மதியச் சிற்றுணவுக்கு இப்படி ஒரு கலாதியான சுவையுண்டு என்பதை மே. ஐ. பரமார்த்தமாக ரஸித்தார். வெட்கப்படாமல் பொச்சடித்துக் கொண்டார்.

'என்ன இருந்தாலும், தனிப்பட்ட ஆக்களைத் திட்டுறது அவ்வளவு வடிவில்லை எண்டு கதைக்கினம்...' என்று இழுத்தார்.

'உந்த நசியல் குணந்தானே எனக்குப் பிடிக்காது.விஷயத்தை உடையும்!'

'இல்லை. போன கோசு கந்தையாவை.சிட்னியிலை இவர் பெரிய இடங்களிலை செல்வாக்காய் இருக்கிறாராம்... அதனாலைதான் நீங்கள்...' வசனத்தை முடிக்க விடாமலே கொண்டோடி சுப்பர் குறுக்கிட்டார்.

'சிட்னியிலை எத்திலை காசுக்கார 'சிறிலங்கன்ஸ்' எல்லாம் இருக்கினம். அவையளைப் பற்றிப் பேசுறனே? wine னும் கொஞ்சம் அடிச்சுக் கொண்டு, 'மைக்ரோ வேவ்' இலை சூடாக்கித் தின்னுறவையளிட்டை இவர் புளுகித் திரிஞ்சால் எங்களுக்கு என்ன? ஆனால் பேராசிரியர் எண்டு சொல்லிக் கொண்டு எங்கடை ஆக்களின்ரை கேஸுகளுக்குத் தொலுக்குமுதலியாகப் போனால் ஆபத்து. கலையை வளக்கப் போறன்,தமிழை வளக்கப் போறன் எண்டால் ஆபத்து. இதுகள் பொது விஷயங்கள். உலுத்தனுகள் பொது விஷயங்களிலை விலகி இருக்கிறது தான் வடிவு. இவர் பேராசிரியரோ? open university vice-chancellor இவருக்குக் குடுத்த தகடு உமக்குத் தெரியாதே? இவர் கல்விச் சேவை ஆணைக்குழுவில் இருந்து 'டீச்சிங் போஸ்ட் எடுத்துத் தாறன்' எண்டு எத்தினை குடும்பங்களின்ரை தாலியை அறுக்க வைச்சவர் தெரியுமே? தெரியாட்டில் புலேந்திரன்ரை மனுஷியைக் கேட்டுப் பாரும்... இவருடைய லஞ்ச லாவண்யத்தை வடிவா அறிஞ்சல்லோ பிரேமதாஸ இவருக்கு Extension குடுக்க மாட்டன் எண்டு சொன்னவர்... பொது வாழ்க்கை எண்டு வந்தால் ஒரு Accountability தேவை. இல்லையே?...சிட்னியில இவர் Migrant course களுக்குப் போறது, Photo-stat மெஷின் பாவிக்கத்தானாம்... ஐயாத்துரை, சிஸ்ட பாரிபாலனத்துக்கு முன்னம் துஷ்ட நிக்கிரஹம் நடக்க வேணும். இதுதான் நியதி...' என்று கொ.சு முடித்தார்.

'அது சரி... முக்கியமான விஷயத்தை சொல்ல மறந்து போனன்... கொழும்பிலை பொக்கன் கணபதியாரைக் கண்டனான்... உங்களைப் பற்றி நல்லா விசாரிச்சவர்...'

'தாலியைக் கட்ட... உதை யல்லோ முதலிலை சொல்லியிருக்க வேணும்... கொக்கன் கணபதி மகன் மொக்கன்கணபதி மகன் பொக்கன் கணபதியோ?... எப்ப இலங்கைக்கு வந்தவர்?... அவர் என்ரை குருநாதர் அல்லோ?...' என்று புழுகம் தாங்காமல், மண்டாடி சுப்பர் மகன் திண்டாடி சுப்பர் மகன் கொண்டோடி சுப்பர் ஈச்சேரிலிருந்து துள்ளிக் குதித்தார். □

## மங்கை–மது–கவிதை

போதையேற்ற மதுவும், போகத்திற்குப் பேரெழில் மிக்க பெண்ணும், படித்துச் சுவைப்பதற்குக் கவிதை நூலும் இருந்தால், உலகில் வேறெதுவும் மனிதனுக்குத் தேவையில்லை, என்று அந்தக் கவிஞர் நினைப்பவர்.

அவர் ஒருநாள், போர் முனையிற் கடமையாற்றும் ஒரு போர்வீரனைச் சந்தித்தார். "நீ இந்த உலகில் இன்று மிகவும் விரும்புவது எந்தப் பொருளை?" என்று கேட்டார்.

மது-மங்கை-கவிதைநூல் ஆகிய மூன்றும் அவர் மனத்திலே வலம் வந்தன. ஆனால் போர் வீரன் அமைதியான குரலில்."இன்று நான் அதிகம் விரும்பும்பொருள் நாளையே"! என்று பதிலளித்தான்.

-மகான்



படிப்பகம்

www.padippakam.com

**புலம் பெயர்ந்து** வாழும் தமிழர்களிலே சிலர் மனத்தால் 'வெள்ளைக்காரர்'களாகி விட்டார்கள். அவர்கள் அப்பாவிகள்; 'காகம் எவ்வளவு உயரப் பறந்தாலும் பருந்தாக மாட்டாது' என்கிற அற்ப உண்மையைக்கூடத் தரிசிக்க இயலாத அப்பாவிகள். பரதேசிகளாகிவிட்ட அவர்கள் தூங்கட்டும்; நமது பயணம் பயனுள்ளதாகத் தொடரட்டும் என்று பலர் தமிழ் உலா மேற்கொண்டிருத்தல் நமக்கு உவகைதருகின்றது. இந்தத் தமிழ்ச் செலவின் தூதுவர்களைப் போல தமிழ்ச் சஞ்சிகைகள் பல, பல நாடுகளிலிருந்து வெளிவருகின்றன. இவற்றின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகம் என்றுகூட சொல்லுகிறார்கள். இவற்றுட் பல அற்ப ஆயுசாகக் கால நதியிலே மூழ்கலாம். இருப்பினும், இவை அனைத்தையும் இன மானத்தையும் - சுய கௌரவத்தையும் தேடும் ஒரு சமூகத்தின் குரலாகவும், கலையாகவும், வாழ்வை பிரதிபலிக்கும் நிலைக் கண்ணாடிகளாகவும் நாம் தரிசிக்கின்றோம். நாளைய சந்ததியாருக்கு இன்று வாழும் நமது சமூகத்தின் தமிழ் நேசிப்பாகவும், ஆதங்கங்களின் சின்னங்களாகவும் இவை திகழுதலும் சாத்தியமே.

அக்கினி - 1 குஞ்சு-5

ஜூன் 1991

இவற்றின் மத்தியிலே, எங்கிருந்தோ சில குரல்கள் - அபசுரக் குரல்கள் - உரத்துக் கேட்கின்றன. ''புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியிலிருந்து வெளிவரும் சஞ்சிகைகள் தமது அரசியல் வெளிப்பாட்டைத் தெளிவாக முன் வைப்பதில்லை. 'இவை நம்முடைய கருத்தாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை' என்ற கவசமணிந்து போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் கருத்துக்களைத் தாங்கி வருகின்றன.'' இதுதான் குற்றச்சாட்டுகளின் சாரம்.

ஈழத்தமிழர் மத்தியிலே தாயகம் பற்றிய பல முரண்பாடான கருத்துக்கள் உண்டு. இவற்றுட் பல பொதுவான ஓட்டத்திற்கு எதிரானவையாகவும் இருக்கலாம். கொச்சையானவையாகவும் இருக்கலாம். சமூக விரோதம் என்ற நஞ்சிலே தோய்ந்தனவாகக்கூட இருக்கலாம். ஒப்புக் கொள்ளுகின்றோம். கருத்துக்கள் எவையாகவும் இருக்கலாம். 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும்' அமையலாம். 'காமம் வெகுளி மயக்கம் இவை' மூன்றும் மண்டினவையாக அமையலாம். 'ஐயத்தின் நீங்'காத் தன்மைத்தனவாக அமையலாம். 'கல்லா ஒருவன் தகைமை தலைப் பெய்' தவையாக அமையலாம். இருப்பினும், இந்தக் கருத்துக்களைச் சுயாதீனமாக வரித்துக் கொள்வதற்கும், இஷ்டப்பட்டால் அறிக்கையிடுவதற்கும் உரிமை வேண்டும். தமிழ்மொழியை உடையவர்களாகிய நாம், தாயகத்தில் அநுபவிக்கும் இன்னல்களின் மூலவேர் என்ன? நாம் எண்ணிக்கையில் குறைந்தவர்கள்! சிறுபான்மையினர். எண்ணிக்கை விழுக்காடினால் வீழ்ந்தவர்கள்! இந்த ஞானத்துடன் அந்தக் கருத்துக்களை அநுமானித்தல் ஏற்றது. 'உன் கருத்துக் கொச்சையானது; உன் கருத்தைக் கடுமையாக எதிர்க்கின்றேன்; ஆனால் நீ எந்தக் கருத்தையாவது சுயாதீனமாகக் கொண்டிருக்கும் உரிமையைப் பாதுகாக்க அதைக்காட்டிலும் கடுமையாகப் போராடுவேன்' என்கிற பண்பு, ஞானத்தின் முதுவிளைச்சல். எது சரி? எது பிழை? எது தர்மம்? எது அதர்மம்? இவற்றை எண்ணிக்கைகளோ, பலாத்கார பலமோ தீர்மானிக்க மாட்டா. ஈற்றில் சத்ய நிர்ணயம் ஒன்று உண்டு என்று நம்புகின்றோம்.

குறிப்பிட்ட அரசியல் கருத்துக்கு ஆதரவு பாடித்தான் எல்லாச் சஞ்சிகைகளும் வெளிவருதல் வேண்டும் என்கிற முரட்டுப் பிடிவாதம்

# தர்மத்திற்கு முதல் வணக்கம்!

அறியாமை மண்டியது. ஆணவம் சார்ந்தது. அநாகரிகம் தழுவியது. அத்துடன், கலை - இலக்கிய - கலாசார வரட்சிக்கு வழி வகுக்கும். கருத்துக்கு எல்லை வகுக்கும் போக்கு, கலை-இலக்கிய வடிவங்களுக்கும் எல்லை வகுக்கும் போக்காக வளர்ந்தால்?... இந்தத் தடத்திலே கற்பனையை வளர்க்கச் சங்கடமாக இருக்கின்றது....

ஒன்று பற்றிய திவ்விய தரிசனம் இப்பொழுது தேவை. சத்தியத்தின் பக்கலிலே நிற்பவன் எதிர்க் கருத்தைக் கண்டு அஞ்சுவதே இல்லை. சத்தியம் ஜெயிக்கும். இந்த நம்பிக்கைதான் போராட்டத்தின் கவசமும் ஆயுதமும். வெற்றியின் பூபாளமும்! எனவே, சத்திய நோன்பைத் துறப்பவன்தான், எதிர்க்கருத்தைக் கண்டு சினங் கொள்கின்றான். சினத்தின் வசப்படுபவன், வெற்றியை இழந்தவனும் ஆகின்றான்.

நடுநிலைமை சமன் நழுவுதல் எனக் கற்பித்தல் தவறு. பாரதப் போரிலே, கிருஷ்ண பரமாத்மா ஆயுதம் ஏடுத்துப் போர் புரிவதில்லை என்று அறிவித்தார். இந்த அறிவிப்பின் அர்த்தம்

22-ம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

21-ம் பக்கத் தொடர்ச்சி

என்ன? போரைக் கண்டு அச்சமா? அல்லது நழுவி ஓடும் யுக்தியா? தர்மத்தின் பக்கத்திலே நிற்பவன் ஆயுதம் ஏந்தாமலே வெற்றிக்கு நிறைவாகப் பங்களிப்புச் செய்யலாம் என்பதின் தரிசனமே பார்த்தஸாரதியின் அவதாரம். அவர், சமர் நிலத்திலே பகவத்கீதையை அருளிய அதிமேதையாகவும் உயர்ந்துவிட்டார்! இதிகாசப் பழைமை பேசுதல் நயமாக இல்லையா? விடுங்கள். மாவோ நேற்று வாழ்ந்த வரலாற்று நாயகன். மாபெரும் மக்கள் சக்தியை வளர்த்து, சீனாவின் வரலாற்றுப் போக்கினையே மாற்றியவன். எதிர்க் கருத்துக்களை 'கொச்சையானவை' என்று தூற்றவில்லை. மாறாக, 'நூறு பூக்கள் பூக்கட்டும்; ஆயிரம் சிந்தனைகள் மோதட்டும்' என்று புரட்சியின் மத்தியிலும் அறிவுச் சுதந்திரத்தை வரவேற்றான்.

கருத்துக்கள் பெருகட்டும். அவை எதிர்க் கருத்துக்களாக இருந்தாலும் பாதகமில்லை. பதரைத் தூற்றி, நெல்மணிகளைப் பெறும் ஆற்றல் ஈழத் தமிழனுக்கு உண்டு. 'அக்கினிக் குஞ்சு' தர்மத்தின் பக்கலிலே அணி திரண்டுள்ளது. ஈற்றிலே தர்மம் ஜெயிக்கும் என்கிற அழுங்குப் பிடியான நம்பிக்கையும் நமக்கு உண்டு. □

# வார்த்தைகள் வேறு; கருத்து?

ஈழத்தில் கியூ.ஸி.க்களான இரண்டு சிறந்த தமிழ் 'சிவில்' நியாயதுரந்தர்களிருந்தார்கள். பெரிய பண மோசடி ஒன்று சம்பந்தமாக ஒரு வழக்காளி, முதலில் ஒருவரிடம் அபிப்பிராயம் கேட்டார்.

அவர் கணக்கு புத்தகங்களைப் பார்வையிட்ட பின்னர், அட்டகாசமான குரலில், "இந்த இரண்டாவது கணக்குப் புத்தகத்தைக் கொண்டு போய்க் கொழுத்துங்காணும். நான் வென்று தருகின்றேன்" என்றார்.

வழக்காளி திருப்தியடையாது, இரண்டாமவரிடம் சென்று ஆலோசனை கேட்டார். அவரும் கணக்குகளைப் பார்வையிட்டார். பின்னர், அமைதியான குரலில், "இதிலே பாருங்கோ! இந்த இரண்டாவது கணக்குக் கொப்பி மட்டும் இல்லாதிருந்தால், வழக்கை வெல்லலாம்" என்றார்.

ஒருவர் தியாகலிங்கம்; மற்றவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம்.


**KUMARAN BOOK CENTRE**

SRI LANKAN AND INDIAN MAGAZINES,
NEWS PAPERS, CINE-PUBLICATIONS

□

TAMIL AUDIO CASSETTES

□

SRI LANKAN FOOD PRODUCTS

□

திசை பத்திரிகை விற்பனையாளர்

□

வெளிநாட்டில் வாழும் உங்கள் உறவினர்-நண்பர்களுடன்
உடனுக்குடன் FAX மூலமாக எளிதிலே தொடர்பு கொள்ள,
24 மணி நேரமும் மகிழ்ச்சியுடன் சேவை செய்யக் காத்திருக்கிறோம்.

□

**KUMARAN BOOK CENTRE**

1, TOWER HAMLETS ROAD. LONDON E17 4RQ

Tel 01-520-5960 Fax 01-521-9482

K. MAHESWARAN




படிப்பகம்

www.padippakam.com

# உல்லாச வேளை

☐ கே. பாலசந்தரின் புதுப் புது அர்த்தங்களில் அறிமுகமாகி... புதுவசந்தம், புதுப்புது ராகங்கள் படங்களின் மூலம் தனித்துவமான கதாநாயகியாக தன்னை நிரூபித்துக் கொண்ட சித்தாரா இப்பொழுது பெரிதும் நம்பியிருப்பது 'அர்ச்சனா ஐ.எ.எஸ்' படத்தைத்தானாம். ஜூலை அல்லது ஆகஸ்டு மாதம் திரைக்கு வர இருக்கும் இப் படம் முழு நீள ஹீரோயின் சப்ஜெக்ட் கொண்டது. சித்தாரா வுடன், ஸ்ரீவித்யா, விஜயகுமார், சரத்குமார், ஜனகராஜ், டெல்லி கணேஷ் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள்.

இதயக்கனி, வெள்ளை ரோஜா, மூன்று முகம் ஆகிய வெற்றிப் படங்களைத் தந்த எ.ஜெகநாதன் இப்படத்தை இயக்குகிறார். இசை புதுவசந்தம் எஸ். ஏ. ராஜ்குமார்.

☐ புலன்விசாரணையில் வித்தியாசமான டாக்டர் வில்லனாக வந்து பயம் காட்டிய சரத்குமார் அதற்குப் பிறகு பாலைவனப் பறவைகள், காவல் நிலையம், போன்ற படங்களில் ஆக்ஷன் ஹீரோவாக நடித்திருந்தாலும் - முழுக்க முழுக்க குணசித்திர வேடத்தில் அறிமுகமாகும் படம் 'வைதேகிகல்யாணம்.' இந்தப் படத்தில் சரத்குமாருக்கு இரட்டை ஜோடிகள். ஒருவர் ரேகா மற்றவர் கவிதா. நடிகை ராதாவின் தம்பி ராமார்ஜின் இப்படத்தில் புதுமுக கதாநாயகன். இவர்களுடன் கவுண்டமனி, செந்தில், உத்ரா ஆகியோரும் நடித்திருக்கும் வைதேகி கல்யாணம் ஒரு ஜூலை மாத வெளியீடு!

☐ அமோக வெற்றி எதிர்பார்ப்புகளுடன் கமலின் 'குணா' தயாராகிறான். வழக்கம் போலவே ஏராளமான. பொருட்செலவு! உயிரைத் துச்சமாக மதித்து ஏராளமான ரிஸ்க்ஸ்!! (கமலுக்கு இதெல்லாம் அல்வா சாப்பிடுவது மாதிரி.) கமலுக்கு ஜோடியாக பம்பாயைச் சேர்ந்த ரோஷிணி என்பவர் அறிமுகமாகிறார். மற்றும் ஜனகராஜ், பிரதிப்சக்தி, கிரிஷ்கர்னாடு, அஜய்ரத்னம் நடிக்கும் குணா படத்துக்கு இசைஞானி இசை அமைக்கிறார்.

இயக்கம் - சந்தானபாரதி, 'குணா' படத்தின் வசனங்களை பிரபல எழுத்தாளர் பாலகுமாரன் எழுதுகிறார். ஆகஸ்ட் வெளியீடு!

☐ நடிகர் சந்திரசேகரின் அண்ணனும் ஓவியருமான பாண்டியன் தயாரிக்கும் படம் 'மாங்கல்யம் தந்துனானே!'

'வைகாசி பொறந்தாச்சு' கே. பிரபாகரன் முக்கிய பாத்திரத்தில் நடிக்கும் இப்படத்தில் அவருக்கு ஜோடியாக வைஷ்ணவி நடிக்கிறார். இவர்களுடன் ரவி ராகுல், புதுமுகம் ஜீவா, டிஸ்கோ சாந்தி, குமரிமுத்து, திரைநீதி செல்வம் ஆகியோரும் நடிக்கும் இப்படத்தை எம்.ஏ.காஜாவிடம் உதவியாளராக இருந்த ரவிதாசன் இயக்குகிறார். இசை-தேவா. மாங்கல்யம் தந்துதானே வரும் ஜூலையில் ஒலிக்குமாம்.

☐ புதுவசந்தம், புரியாதபுதிர் வெற்றிப்படங்களைத் தயாரித்த ஆர். பி. சௌத்ரி தற்போது தயாரித்து முடிவடையும் நிலையில் இருக்கும் படம் எம். ஜி ஆர் நகரில். இப்படத்தில் 4 ஹீரோக்கள். (விவேக், கண்ணன், ஆனந்த் பாபு, சார்லி) பார்தி ராஜாவின் அறிமுகமான 'புது நெல்லு' சுகன்யா கதாநாயகி. புதுநெல்லு நெப்போலியன் வில்லனாக! மலையாளத்தில் சக்கை போடு போட்ட 'இன் ஹரிஹரன் நகரில்' என்ற படத்தின் தழுவல் இது. இயக்குனர் ஃபாசிலிடம் உதவியாளராக இருந்த அஸ்ரப் இப்படத்தை இயக்குகிறார். 'எம்.ஜி. ஆர் நகரில்' ஆகஸ்டு மாதம் திரைக்கு வருகிறது.

**இப்போது வெளிவந்த படங்களுக்கான ஒரு வரி விமர்சனம். + மார்க்ஸ்**

**1. என் ராசாவின் மனசிலே....**
இலுப்பம்பூ சர்க்கரை! **45%**

**2. சின்னத் தம்பி**
கோப்பை புதுசு! (இடையில் மட்டும் என்பதை சேர்த்துப் படிக்கவும்). கோப்பைக்காக 20 மார்க், இசைஞானிக்காக 20 மார்க் ஆக **40%**

**3. வாக்கு மூலம்**
தமிழ் பேசும் ஆங்கிலப்படம்! **30%**

**4. பவுனு பவுனு தான்**
பாக்கியராஜ் பாக்கியராஜ்தான்! **44%**

**5. கற்பூர முல்லை**
பாசிலின் மற்றொரு கவிதை **46%**

**6. கேப்டன் பிரபாகரன்**
விஜயகாந்தின் ஆக்ரோஷம், தொழில் நுட்ப மேன்மை, இசைஞானியின் அசத்தல்... **48%**

**7. மில் முதலாளி**
தியேட்டரில் ஸ்டிரைக்! (ரசிகர்கள்) **20%**
(இதில் ராமராஜனின் 'ஜிகினா' டிரெஸ்க்கான பத்து மார்க்ஸும் உள்ளடக்கம்)

**8. ஆயுள் கைதி**
இரண்டரைமணி நேரம் (மட்டுமே) ஜெயில்! **25%**

**9. சேரன் பாண்டியன்!**
நல்லாட்சி!...(திரைக் கதைக்காகவும் விறுவிறுப்பான நகர்வுக்காகவும்.) **43%**

**- யாழ் சுதாகர்**



படிப்பகம்

www.padippakam.com

14-ம் பக்கத் தொடர்ச்சி

சொந்தக்காரர், இப்படி பலர் அவனிடம் absentee ஆக திட்டு வாங்குவதுண்டு. வளைகுடா யுத்த சமயத்தில் 'Good morning' பெரும்பாலும் இப்படித்தான் இருக்கும். "சதாம் ஒரு முட்டாள். இன்னொரு ஹிட்லர். அவன் கொல்லப்பட வேண்டும். நீ என்ன நினைக்கிறாய்?"

தர்ம சங்கடமான கேள்விகள் என்னை நோக்கிப் பாயும் போது, றேச்சல்தான் தடுத்தாட் கொள்வாள். றேச்சல் இளம் பெண். மூன்றாம் தலைமுறை அவுஸ்ரேலியப் பெற்றோருக்குப் பிறந்தவள். இருபத்திரண்டு வயது. சிறுமி போலவும் தோன்றுவாள். அப்படித்தான் சில வேலைகளில் நடந்தும் கொள்வாள். ரோனியை எதிர்த்து, விட்டுக் கொடுக்காமல் வாதாடுவது அவள் மட்டுமே! வளைகுடா யுத்தத்தில் அவுஸ்ரேலியாவின் ஈடுபாட்டை கண்டித்து சிட்னியில் நடந்த சமாதான ஊர்வலங்களில் முன்னணியில் பங்கு பற்றியிருக்கிறாள். இவர்களுடைய விவாதங்களில் தனது பக்க வாத்தியமாக என்னைத் தான் ரோனி அழைத்துக்கொள்வான். ஒதுக்கப்பட்ட கருத்துக்களை சொல்வதன் மூலம் ஒதுக்கப்பட்டு விடுவேனோ என்ற பயத்தினால், மனட்சாட்சியை மறந்து ரோனிக்கு ஆமாம் சாமியாக இருப்பது எனது சாமர்த்தியம் என நான் நினைப்பதுண்டு.

ஒரு நாள் வழக்கமான பல்லவியுடன் ரொனி அலுவலகத்துள் நுளைந்தான்.

'சிட்னி சீவிக்க முடியாத இடமாகி வருகிறது. எங்கு போனாலும் தப்பமுடியாது'

'ஏன்? என்ன விசயம்?' என்று கேட்டேன். கேட்காவிட்டாலும் சங்கடம்.

'வியட்நாமியர்கள் படு மோசம். இன்று காலை காரை எடுக்கப் போன போது அது தன்னுடைய இடத்திற்குள் நின்றதாக அவன் குறை கூறுகிறான் அவனிடம் கார்கூட இல்லை'

'பிறகு'

'பிறகு என்ன பிறகு? இனி வேறு இடம் பார்க்க வேண்டியது தான்! ஒரு வருடத்துள் நாலாவது இடம். நல்ல இடம் என்று இங்கு வந்தால் இங்கேயும் வந்து விட்டார்கள்.'

அப்போது றேச்சல் வர, அவளுக்கும் விஷயம் விளம்பப் பட்டது.

'ஒருவனோடு ஏற்பட்ட பிரச்சினைக்கு முழு இனத்தையும் ஏன் சண்டைக்கு இழுக்கிறாய்?' என்று அவள் கேட்டாள்.

'முன்னர் கார் ஓட்டத் தெரியாமல் எனது காரை பின்னால் அடித்து நொருக்கியவனும் ஒரு வியட்நாமியன் தான். எனது நண்பன் ஒருவனின் காரை அடித்தவனும் அவங்கள்தான். உனக்கு தெரியாது. அவர்கள் அப்படித் தான்.'

'எப்படி உன்னால் அவர்கள் எல்லாம் வியட்நாமியர்கள் என்று கண்டு பிடிக்க முடிந்தது,? ஆசியர்கள் எல்லோரும் எனக்கு ஒரேமாதிரியாகத்தான் தோன்றுகிறார்கள்.'

'எனக்கும்தான்.... ஆனால் பிரச்சினை தருபவர்கள் பெரும்பாலும் வியட்நாமியராகத்தான் இருக்கும். அது சரி றேச்சல். நீ எப்படித்தான் அந்த இடத்தில் சீவிக்கிறாய்?' என்று ரொனி கேட்டான். றேச்சல் பல இனங்கள் வசிக்கும் ஒரு புறநகர் பகுதியில் வசிக்கிறாள்.

'ஏன்? அது நல்ல இடம் தானே?'

'இடம் நல்லது தான், ஆட்கள் எப்படி? அயலவர்களை சமாளிக்க முடிகிறதா?'

'உன்னையே உனது அயலவர்கள் சமாளிக்கிறார்களே? அதை விட எனக்கு ஒரு சிரமமும் இல்லை. நல்ல காலம், நான் இருக்குமிடத்தில் நீ இல்லை'

ஈழத்துக்கல்வி வளர்ச்சி-8

அத்துடன் இரண்டு பிரதான கல்விக் கொள்கைகளை செயலாக்கவும் வழி வகுத்தது. முதலாவதாக, அரசாங்கப் பாடசாலைகளிலும், நன்கொடை பெறும் பாடசாலைகளிலும் கட்டணம் வசூலிக்கும் முறை ஒழிக்கப்பட்டது. அரிவரி தொடக்கம், பல்கலைக் கழகம் ஈறாக இலவசக் கல்வி பெறும் வாய்ப்பு இதனாலேற் படலாயிற்று. இரண்டாவதாக அரசாங்கப் பாடசாலைகளிலும் சமயக் கல்வியும் பாடத் திட்டத்திலே சேர்ந்தன. மேலும் பெற்றோரின் மதமல்லாத வேறு மதங்களுடைய அநுட்டானங்களில் மாணாக்கர் அநுமதிக்கப் படலாகாது என்ற தடையும் விதிக்கப் பட்டது.

இலவசக் கல்வித் திட்டம் 1951-ம் ஆண்டில் மேலும் விரிவுபடுத்தப் பட்டது. இவ்வாண்டில், இலவசக் கல்வித் திட்டத்தை எல்லா அரசினர்-உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலும் அமுலாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன. ஆசிரியர்களுடைய முழுச் சம்பளங்களும், விஞ்ஞான கூடம் - வாசிகசாலை முதலியவற்றைப் பராமரிக்க ஏற்படும் செலவுகளும் அரசாங்கத்தின் நன்கொடையாக அமைந்தன. இலவசக் கல்வித் திட்டத்தின் கீழ் சேராத பாடசாலைகள், உதவி பெறாத-பிரத்தியேகப் பாடசாலைகளாக இயங்க அநுமதிக்கப்பட்டன. அத்துடன், இந்தப் பாடசாலைகள் வசதிக் கட்டணம் வசூலிக்கவும் அனுமதிக்கப்பட்டன. மேலும், ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்கும் முறை சுயபாஷைகள் மூலம் கல்வி கற்கும்முறைக்கு மாற்றப்படல் வேண்டுமென்று கல்வி அமைச்சர் உத்தரவு பிறப்பித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

என்று புன்னகையுடன் றேச்சல் சொல்ல, அவளிடமிருந்து நழுவி ரொனி என்னில் தொற்றினான்.

'ஆசியர்கள், குறிப்பாக வியட்நாமியர்கள், நாகரீகமற்றவர்கள். மற்ற இனத்தவர்களுடன் சினேகமாக பழக மாட்டார்கள். நீ என்ன சொல்கிறாய்?'

'இருக்கலாம். எனக்கு அவ்வளவாக அனுபவமில்லை' என்று சமாளிக்க பார்த்தேன். அவன் விடுவதாயில்லை.

'இப்போது பார். யுவான் உன்னைப் போலவா? அவனுடைய நடத்தைதான் அவனது வேலை போக காரணமாயிற்று. மற்றவர்களை மதிக்க மாட்டார்கள். தாங்கள் தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்ற இறுமாப்பு.'

இப்படி அங்கு வேலைசெய்யும் தனிப்பட்டவர்களை ரொனி தாக்கத் தொடங்கும் போது றேச்சல் தனது வேலையில் நுளைந்து விடுவாள். நான் வழக்கமாக 'ஆமாம் சாமி' தான்! யுவான் தொழில் விஷயத்தில் அனுபவஸ்தன். அவனிடம் நானும் ஒருமுறை 'அடி' பட்டதினால் ஆமாம் போடுவது இந்த சந்தர்ப்பத்தில் அவ்வளவு சிரமமாக இருக்க வில்லை. ஆனால் ஆசியர்களை பொதுவாக அவன் ஏசும் போது மனசு பெரும் சங்கடப்படும். தவிர்க்க முடியவில்லை. எங்களை இவர்கள் ஆசியர்களாக எடுத்துக் கொள்வதில்லை. இருந்தாலும் நாம் ஆசியர்கள் என்ற நிதர்சனத்தை என்னால் நிராகரிக்க இயலவில்லை.

தர்க்கத்திற்குரிய விஷயங்களை அவுஸ்ரேலிய அலுவலக நண்பர்கள் எந்தக் காலத்திலும் தவிர்த்துக் கொள்வார்கள். தொழில் விஷயத்திலும் அது செல்லும். ஆனால் ரொனி எந்த வித தயக்கமும் இன்றி தனது இனவாதக் கருத்துக்களை சொல்லி விடுவான். நானும் அவனுடன் சர்ந்து சீனர்களின் சின்னத்தனம் பற்றி கதைப்பதன் மூலம் பிழைத்துக் கொள்வேன். பக்கத்திலுள்ள பற்றிக் புன்னகைத்துக் கொள்வான்.

ஒப்பந்த அடிப்படையில் இங்கு வேலையிற் சேர்ந்த பற்றிக் பத்து வருடங்களுக்கு முன்னர் அக்கரை பச்சையை நாடி பிரிட்டனிலிருந்து குடியேறியவன். வாயைத் திறக்காமலே கதைக்கும் வல்லமை இவனுக்கு உண்டு. எந்த விவாதங்களிலும், நிரந்தரமாக அவனது முகத்தில் ஒட்டிக் வைத்துள்ள சிரிப்பை வீசிவிட்டு பக்கம் சாராத பக்குவவாதி போல் வேலையில் தியானித்து விடுவான். நிமிடங்களை டொலர்களால் மாற்றீடு செய்பவன். விதண்டாவாதங்களில் அதை வீணடிக்க முடியாது தானே, வளைகுடா யுத்தத்தில்

## நமது பழக்கங்கள்



நண்பர் மிகவும் வைதீகமானார். விடுதியிலிருந்த எல்லோரும் அவரைச் சாமியார் என்றுதான் அழைப்பர். சாமியாரும் நானும் ஏதோ பேசிக் கொண்டே 'பேவ்மென்ற்' வழியே சென்று கொண்டிருந்தோம். கறுத்தக் கம்பளம் விரித்தாற் போன்றிருக்கும் காலி வீதியில் காரும் பஸ்ஸுமாக ஓடிக்கொண்டிருக்கும் RUSH HOUR. திடீரென நண்பர் விடுதியின் நடுவேயுள்ள மஞ்சள் கோட்டிற்குச் சமீபமாக ஓடினார். அதன் பயனாக ஒரு வாடகைக் கார்ச் சாரதியிடம் திட்டும் பக்கத்தே நின்ற போலிசுகாரனிடம் இரண்டு வார்த்தைகள் 'அன்பான' புத்திமதியும் பெற்றுத் திரும்பவும் ஓடிவந்து வீதியோரத்தைஅடைந்தார். என்ன நடந்ததெனத் தெரியாத எனக்கு, நண்பரே விளக்கந் தந்தார். எங்கிருந்தோ ஒரு பூனை குறுக்கே வந்திருக்கிறது. நான் அதைக் கவனிக்கவில்லை. நண்பர், பூனை தனக்கு முன்னே ஓடிவிடும்முன்னர் தான் பூனைக்குமுன்னே ஓடிவிட வேண்டுமெனத் தீர்மானித்து ஓடியிருக்கிறார். கிளிதட்டு முயற்சிதான் அவரைக் காலி வீதியின் நடுவிற்கு இழுத்துச்சென்றிருக்கிறது. பூனையை தாண்டி விட்ட திருப்தியில் கார்ச்சாரதியின் திட்டும் போலிசின் ஏச்சும் அவர் காதில் ஏறியதாகத் தெரியவில்லை. பூனை குறுக்கே வராதபடியால், தான் செல்லும் அலுவல் தடைப்படாது என்பது அவரது எண்ணம். (இவர் குறுக்கே சென்றதால் பூனைக்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.) அன்று காரில் அடிபடாது விட்டது என்னவோ அதிர்ஷ்டந்தான். நரிஇடப்பக்கம் போனாலென்ன? வலப்பக்கம் போனாலென்ன? ஆளில் விழுந்து கடிக்காமல் விட்டால் போதுமானது என்பதே எனது கருத்தாகும்.

-ஆர் பா



படிப்பகம்

www.padippakam.com

மட்டும் அவனால் வாயை மூடிக் கொண்டிருக்க முடியவில்லை. நேச்சலின் சமாதானம் எவ்வளவு பிற்போக்கானது என்று நிரூபிக்க ரொனியை விட பற்றிக் தான் அதிக பிரயாசைப் பட்டதாக ஞாபகம்.

நாளாவட்டத்தில் ரொனி ஒரு Male Chauvinis எனப் பெண்களால் வர்ணிக்கப்பட்டான். அவன் தனது கொம்பியூட்டரை 'திஸ் வுமன்' என்று அழைப்பதும், கொம்பியூட்டரில் ஒரு நிர்வாணப் பெண் நடமாடும் தோற்றத்தை வரவழைத்து பெண்களுக்குக் காட்டுவதும் இதற்குக் காரணங்களாயிருக்கலாம்.

பின்னர் நடந்த ஒரு சம்பவம்தான் என்னை மிகவும் தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கியது. தகவல்களை கொம்பியூட்டரில் ஒழுங்கு படுத்தும் முறை பற்றி கம்பெனி இயக்குனருக்கும் ரொனிக்கு மிடையில் கருத்து வேறுபாடு. நான் ஏற்பாடு செய்த முறையே வழக்கத்தில் இருந்தது; அதன்படி செய்வதே தகுந்தது என இயக்குனர் சொன்னதை அவன் ஏற்கவில்லை.

'ஏன் இப்படியும் செய்யலாம் தானே? இதில் என்ன தவறு? இலகுவில் விளங்கக் கூடியதாகவும் இருக்கின்றது!' இது- ரோனி.

'என்றாலும் ஒரு அலுவலகத்துள் இரு வேறு முறைகளைப் பயன்படுத்த முடியாது.'

'அப்படி என்றால் இந்த முறையையே நடைமுறைப்படுத்தலாம் தானே? இதில் வேறுபடுத்துவது இலகுவாகும்.'

மேலும் விவாதிப்பதில் அர்த்தமில்லை என்றுணர்ந்த இயக்குனர், 'எது எப்படி இருந்தாலும் இங்கு ஏற்கனவே உள்ள முறைப்படியே செய்யும்' என்று கட்டளை இடுவது போல் சொல்லிச் சென்றார். நான் இயக்குனரின் கருத்தின் நியாயத்தை அமைதியாக விளங்கப் படுத்தினேன். அவன் ஏற்றுக் கொண்டானோ என்னவோ?

'அவர்களுடைய கம்பெனி. எனக் கென்ன? அவர்கள் சொன்ன மாதிரியே செய்கின்றேன்!' என்று அலுத்துக் கொண்டான்.

இது போல் பல சந்தர்ப்பங்களில் அவனுக்கும் மேலதிகாரிகளுக்கும் இடையே விவாதங்கள் ஏற்பட்டன. தொழில்நுட்ப விடயங்களில் ரொனி அவர்களைவிட அதிக அனுபவமுடையவனாக காணப்பட்டான். அவனே பல விடயங்களில் சரி போல் தோன்றியது. ஆனால், அவன் சொல்கின்ற முறையால் அவனுடைய சரியான கருத்துக்களும் ஏற்கப் படாமல் போய் விடுகின்றன. சுற்றி சுற்றி வந்து கடைசியில் ரொனியே சரி என்று கண்ட சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த நேரங்களில் அவன் கடும் சினத்துக்குள்ளாவான்.

பற்றிக்கினுடைய ஒப்பந்த காலம் முடிவடைந்து விட்டது. கம்பெனிக்கு தொடர்ந்து அவனை வைத்திருக்க கூடியளவு வேலை கிடைக்கவில்லை. அவன் சொல்லும்போது ரொனி மிகுந்த விசனப்பட்டான். அடுத்தது தனக்குத்தான் என்று மனசார நம்பினான். ஆனால் பற்றிக் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. ஏற்கெனவே இங்கிலாந்து திரும்புவதாக முடிவெடுத்திருந்தான். அவனது மூன்றாவது வீட்டை விற்க வேண்டி வந்த வுடனேயே 'இனி அவுஸ்ரேலியா சரிப்படாது' என முடிவெடுத்ததாக சொல்லிக் கொண்டான். வீடு விற்பனையில் மனைவியுடன் வார்த்தை மோதல்கள் ஏற்பட்டதாக ரொனிதான் சொன்னான். அது பெரிய விஷயமா? தினம் தினம் நமது வீடுகளில் நடப்பதுதானே? இது அப்படி இல்லையாம். தொடர்ந்த மோதல்கள் மணமுறிவில் முடியலாம் ஆனால் நான் பற்றிக்கில் எந்த 'அசுமா'த்தத்தையும் காணவில்லை. சில நாள்களில் பற்றிக் இங்கிலாந்து சென்று விட்டதாக தகவல் கிடைத்தது.

அன்று வேலையை எப்படியும் முடித்துவிட வேண்டுமென்ற தேவையால் மதிய இடைவேளைக்கும் வெளியில் செல்லாமல் நானும் ரொனியும் வேலையில் மூழ்கி இருந்தபோது ரொனியை இயக்குனர் சில நிமிடங்களுக்கு வரச் சொன்னார்.

'இந்த நேரத்தில் இவர் வேறு' என்று அலுத்துக் கொண்டே சென்றான். சென்றவன் வேறொரு முகத்துடன் மெதுவாக வந்தான். அவசரமான நேரங்களில் பாய்ந்து நடக்கும் பழக்கமுள்ள ரொனி ஆறுதலாக வருவது ஆபத்தின் அடையாளம் என்றுணர்ந்த நான், 'ஏதாவது பிரச்சினையா?' என்றேன்.

'இவங்கள் எல்லாம் BASTARDS !'- அவன் வெடித்தான்.

'என்ன நடந்தது?'

'என்னை நிப்பாட்டி விட்டார்கள். இன்னும் ஒரு வாரந் தான் வேலை.'

சென்ற மாதம்தான் எமது அலுவலகத்தில் வேலை செய்த எட்டுப் பேர் வீட்டுக்கு அனுப்பப் பட்டு மற்றவர்களின் சம்பளங்களில் பத்து வீத சுருக்கமும் ஏற்பட்டது. இருபது வருடங்களில் அவுஸ்திரேலியா அனுபவிக்கின்ற மோசமான பொருளாதார தேக்கம் இதற்கு உபயமளித்தது. கட்டாயம் தேவையானவர்களே எஞ்சியிருந்தனர். இனி ஆட்குறைப்புக்கு அவசியம்ஏற்படாது என்று உத்தரவாதமும் தந்தனர். ஆனால் இன்று......

இது ரொனிக்கு இந்த வருடத்துள் நடந்த மூன்றாவது வேலை மறுப்பு. இந்த நாட்டில்



படிப்பகம்

www.padippakam.com

தெறிக்காத குரல்.

அன்றும் இப்படித்தான்...... நீ பிரசவ அறைக்குள் கொண்டு செல்லப் பட்டிருக்கிறாய். குட்டி போட்ட பூனை போல எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. விறாந்தையின் ஓர் எல்லையிலிருந்து மறு எல்லை வரை எத்தனை தடவைகள் என் கால்கள் நடந்து விட்டன? கால் உளைவோ, மன உளைவோ? அப்பாவாகும் பெருமை உள்மனதில் பொங்கி வழிய, 'குழந்தை பெண்ணோ, ஆணோ?' என்ற ஆருடங் கணிப்பதில் மனம் குதிக்க நடந்துகொண்டிருந்த என்னை, அந்த 'நேர்'ஸின் அழைப்புத் தரிக்கச் செய்தது. அந்த அழைப்பிலே ஓர் அவசரம்; எதையோ மறைத்துச் சொல்வதான நடுக்கம் தொனித்தது..

''ஓம்''

இந்த வார்த்தையை நான் குரல் வளைக் கிணற்றின் ஆழத்திலிருந்து எடுப்பதற்குப்பட்ட அவஸ்தை......

''டொக்டர் உங்களை வரட்டாம்''

''மிஸ்டர், மயில்வாகனம்! இது மிகச் சிக்கலான கேஸ். சிசேரியன் ஒப்பரேஷன்தான் வழி...... தாயையாவது காப்பாற்றலாம்.''

''ஐயோ, யார் குழந்தை வேண்டுமென்றது? தாயைக் காப்பாற்றித் தாருங்கள் டொக்டர், அது போதும்,'' என்று அலறிவிட்டேன். உணர்ச்சிகளைப் போர்வையிட்டுப் பேசுவதுதான் நாகரிகமாம்... அந்தக் கணம், உணர்ச்சிச் சுழலிலே சகலவற்றையும் இழந்துவிட்ட துரும்பாகத் தவிக்கின்றேன்.

ஓர் உயிரைப் பிரசவிக்கச் சென்றநீ, இரண்டு மாதங்களாக ஒரே படுக்கையாகக் கிடக்கின்றாய். அப்பொழுது பாதி பிணமாகத்தானே இருந்தாய்? ஊரார் உதவிய உதிரத்திலே'நீ ஜீவித்த காலம் அது.சிசேரியன் ஒப்பரேஷனுக்குப் பிறகு, மார்பிலே பல புதிய 'சிக்கல்கள்' தோன்றினவாம்.தொடர்ந்து மார்பிலே சத்திர சிகிச்சை. ஒரு நாள் பூராவும் ஸ்மரணையற்றிருந்தாய். டொக்டர் என்னை எப்படியோவெல்லாம் தேற்றினார்......



அன்று எமனை ஜெயித்த நீ, இன்று தோற்று விட்டாய்.

நான் டொக்டரின் அறைக்குச் செல்வதாக நடக்கிறேன். என் உடல் அவ்வளவு பாரமானதா? அதனைச் சுமக்க இயலாது கால்கள் இடறுகின்றன...... என் தந்தையும், தாயும் வருகின்றார்கள். என் அம்மா உன் தாயைப் பிடித்துக் கொண்டு 'சலிப்பு'ச் சொல்கின்றாள்.

தந்தை என்னிடம் வருகின்றார். கண்களிலே துளிர்த்து நிற்கும் கண்ணீரைச் சால்வையினால் ஒற்றியெடுக்கும் அவசரம். அப்பாவின் கம்பீரமான குரலிலே எப்படி இந்த உடைவு ஏற்பட்டது?

''தம்பி, நாங்க்ள் கொடுத்து வச்சது அவ்வளவுதான். வெளியாலை கார் நிக்குது. கொம்மானும் இருக்கிறார். நீ வீட்டை

---

சர்வசாதாரண நிகழ்ச்சி இது. அடுத்த நாள் வந்த ரொனி, 'நான் போத்துகளுக்கு போகிறேன். உமக்கு ஒன்று சொல்லுகின்றேன். இவர்கள் இனவாதிகள். நானும் நீயும்தான் எஞ்சியுள்ள அந்நியர்கள். இப்போது எனக்கு. இனி உனக்கு வரலாம். இவர்களுக்கு இனி எம்மைத் தேவையில்லை. இப்போதே வேறு வேலை ஒன்று தேடு......!' என்றான்.

'நீயும் வேறு வேலைக்கு முயலலாமே!'

'இனிப் போதும். என்னால் தாங்கேலாது!'

உழைப்பைப் பண்டமாக விற்று வாங்கும் வர்த்தக உலகில் மனித நேயத்தை ரொனி எப்படி எதிர்பார்க்க முடியும்? அதை ஏற்கனவே சொந்த நாட்டில் தொலைத்துவிட்டு இங்கு கிடைக்கும் என்று தேடி வந்தானோ?

'போத்துக்களில் போய் என்ன செய்வாய்? உனக்குத்தான், அங்குள்ளவர்களைப் பிடிக்காது என்று சொல்வாயே?'

'நான் ஆத்தலயாவுக்கு போகவில்லை.லிஸ்பனுக்குத்தான் போகப் போகிறேன். எனக்கு உறவினர்களைத்தான் பிடிக்காது. ஆனால் என் ஊர் மிக அழகானது, எங்களுடைய மொழியைப் போலவே!' பெருமையாக சொல்லிக் கொண்டான்.

மௌனமாக இருந்த கம்பியூட்டரை முடுக்கினேன். 'நொய்' என்ற இரைச்சலுடன் அதுஉயிர்த்தது. ரொனி நிர்வாணப் பெண் நடமாடும் தோற்றத்தை வரவழைப்பான். காலையடியின் நிலவளத்தை வானோக்கிச் செல்லும் பனை மரங்களை கம்பியூட்டரில் தோற்றுவிக்க என்மனம் தைரியத்தை தேடுகிறதா? 'என் ஊர் மிக அழகானது, எங்களுடைய மொழியைப் போலவே!' என்று கம்பியூட்டர் வசனம் பேசுகிறதா? வேலையில் மூழ்கினேன். ☐

படிப்பகம்

www.padippakam.com

போ, நான் சவத்தை எடுத்துக் கொண்டு வாறன்......''

கல்யாணி! நீ இப்பொழுது சவம்; நாளை......

...கிலித் தொடரான வைத்தியத் ...ற்குப் பின்னர் உன்னை வீட்டிற்கு ...ழைத்துச் செல்ல வந்திருக்கின்றேன். ...ந்த இரண்டு மாதங்களுக்கிடையில் ...னும் டொக்டரும் நண்பர்களாகிவிட் ...டாம். அவர் என்னைத் தனியாக ...ழைத்தார்.

...மயில்வாகனம்! பொதுவான கூட்டு ...ாழ்க்கைக்காகவும் பண்பிற்காகவும் ...னிதன் தன்னுடைய சில சுதந்திரங் ...ளையும், இச்சைகளையும் துறந்தான். ...முதாயப் பிராணியாக வாழ்வதற்குக் ...ட்டுப்பாடுகள் அவசியம்...... தனது இச்சைகளை அடக்கி ஆழ்பவனே மனிதன். நீங்கள் மனைவியை அழைத்துச் செல்லும் இக்கணம் 'நான் மனிதனாக வாழ்வேன்' என்ற சங்கற்பத்தினையும் ஏற்றுக் கொள்ளவும்.'' தான் சொல்ல நினைத்தவற்றை நேரடியாகச் சொல்லாது சுற்றி வளைத்துக் கூற முடியாது தடுமாறுகின்றார்.

''டொக்டர்! நேரடியாகச் சொல்லுங்கள். நான் என்ன குழந்தையா?'' என்று வலிந்து உதிர்க்கும் சிரிப்புடன் கேட்கின்றேன்.

''உங்களுடைய மனைவி குடும்ப வாழ்விற்கு உதவ மாட்டாள். குறைந்தது மூன்று வருடங்களாவது விலக்கி நடக்கவும். அதற்குப் பின்னரும் என்னிடமோ வேறு ஒரு டொக்டரிடமோ உங்கள் மனைவியை அழைத்துச் சென்று காட்டுங்கள்...... அதற்கிடையில் கணப்பொழுது பலவீனத்திற்கு நீங்கள் இரையாகிவிட்டால், அவளுடைய உயிரை யாராலும் மீட்டுத் தர முடியாது.''

அவருடைய ஒவ்வொரு சொல்லும் என்னுடைய வாலிப எழுச்சிகளின் உயிர் முடிச்சுகளைத் திருகுகின்றன.

''இது சாமான்யமான பரீட்சையில்லை. நெஞ்சிலே வைரத்தின் வைரந் தேவை... இந்த விஷயத்தினை உங்கள் மனைவிக்குச் சொல்ல வேண்டாம். அது அவளுக்குச் சிக்கலை ஏற்படுத்தி மன நோயைக் கொண்டு வரலாம். சகஜமாக உடல் ... இருக்



நடத்தப்போகும் போராட்டம்; உங்கள் மானுஷீகத்திற்குச் சவால்'' ......

''நான் மனிதனாக வாழ்வேன்!''

''தம்பி, நீ படிச்சவன். உனக்கு நானே புத்தி சொல்லுறது? விதியை யாரால் வெல்ல முடியும்... போய்க் காரிலே ஏறு.''

''டொக்டர் ஒருக்காப் பாக்க வேணுமாம்''...

கல்யாணி! நீ உடல்தேறியதும் மீண்டும் பாடசாலைக்கு வரத் தொடங்குகின்றாய். நீ கிட்ட நெருங்க நெருங்க நான் எட்ட எட்ட ஓடுகின்றேன்...... என் உணர்ச்சிகளைப் பொசுக்கி, பொம்மையாக இயங்குகின்றேன். உன் சரசப் பேச்சுக்கள் எனக்கு எரிச்சலை மூட்டுகின்றன. 'மேல் படிப்புக்கு தயார் செய்கின்றேன்' என்று கவசந் தேடிக் கொள்ளுகின்றேன். இருவருக்கு மிடையில் மௌனச் சுவரொன்று எழுகின்றது...... நீ என்னை வெறுக்கின்றாய் என்பது எனக்குத் தெரியும்.... அதனைப் போக்க வழி தெரியாது என்னுள் நானே சாம்பிக் கொண்டிருந்ததை நீ அறியமாட்டாய். ஊசி விவகாரங்களை உலக்கையாகப் பெரிது படுத்துகின்றாய். மனக் கசப்பின் நிழல் பாடசாலை வரையும் வளர்கின்றது. என்னை அந்நியனாகப் பார்க்கின்றாய். நமது மாற்றம் பாடசாலையில் பல வதந்திகளைக் கிளப்புகின்றது. ''ஆசை அறுபது நாள்'' என்று பண்டிதர், வார்த்தைக் கோடாரியினால் என் நெஞ்சைப் பிளக்கின்றார்.

பல நாட்களாக சொல்ல நினைத்திருந்ததைத் துணிந்து சொல்லுகின்றேன்.

''கல்யாணி! நல்ல சுவாத்தியமுள்ள வேறோர் ஊருக்கு நீ மாற்றிப் போவது நல்லது.''

''ஓம். நானும் அதைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன்-'' உன் வெறுப்பின் காங்கை என்னைச் சுடுகின்றது.

''அப்படியே செய்''

நாவலப்பிட்டிக்கு மாறுதல் கிடைக்கின்றது.

டொக்டரின் அறைக்கு சமீபித்து விட்டேன்.

கதவைத் தட்டுகின்றேன்.

''யேஸ், கம் இன்.''

புதிய இடத்திற்குச் சென்றதிலிருந்து நீ எவ்வளவோ மாறிவிட்டாய். மாற்றம்

படிப்பகம்

www.padippakam.com

நல்லதுதான். கலகலப்பாக இருக்கின்றாய். விடுமுறை காலங்களிலே வீட்டிற்கு வந்திருந்தாலும் உற்சாகத்திற்குக் குறைவில்லை. அங்கே உன்னுடன் படிப்பிக்கும் நேசமணியும், தனலெட்சுமியும் வந்தால் மணிக்கணக்காக இருந்து பேசுவாய். வாடிச் சோர்ந்த மலரா......? புது மலரின் தேன் கவர்ச்சி!

இரண்டு மாதங்களுக்கு முன்னர் நீ விடுமுறையில் வந்திருந்தது நன்றாக ஞாபகமிருக்கின்றது.

ஓரிரவு நடுநிசி. உலகமே உறக்கத்திற் சுகிக்கும் வேளை. நான் மட்டும் புத்தகங்களிலே மனதினைப் புதைத்திருக்கின்றேன். நீ திருட்டு நடை நடந்து...... உன் கூந்தல் என் கழுத்திலே புரள எவ்வளவு இதமாக இருக்கின்றது...... நீ என்னைத் தழுவி அணைத்து போதை ஊட்டுகின்றாய்...... அப்புறம் மிருக ஆவேசம் கொண்டவளாக என்னை அழைக்கின்றாய்...... வெட்கமற்று, இவ்வளவு விரசமாக நடக்க எப்படிக் கல்யாணி கற்றுக் கொண்டாய்? உன் தவிப்பிற்காக நான் அநுதாபப் படுகின்றேன். ‘‘போய்ப் படு!’’ உடலைப் பொசுக்கும் தணலைத் தட்டிச் சொல்கின்றேன். நெடு நேரம்வரை நிலத்தில் புரண்டு விசும்புகின்றாய்.

நீ உன்னையே இழந்து விட்டாயா? அடுத்த நாளே நாவலப்பிட்டிக்குச் சென்று விட்டாய். உன்னைச் சமாதானப்படுத்திக் கடிதங்கள் எழுதினேன். என் கை வலித்தது. நீ பதில் எழுதாது ஏமாப்பைடைகின்றாய்.

‘‘உடல் நிலை அபாயம்; உடன் வரவும்?’



இந்தத் தந்தியை அனுப்ப எப்படி உனக்கு மனம் இளகிற்று?

இங்கு அழைத்து வந்து, உன்னைத் தேற்றலாம் என்றுதானே கல்யாணி நம்பினேன்?

நீ ஏமாற்றி விட்டாய். என்னை இருட் காட்டில் இடறவிட்டு நீ போய்விட்டாய். ஐயோ, கல்யாணி!

டொக்டர் என்னை நிமிர்ந்து பார்க்கின்றார். விழிகள் அறுவைக் கத்திகளைப் போன்று என்னைப் பார்க்கின்றன.

‘‘இப்பொழுது திருப்திதானே? உமது நோயாளி மனைவி இறந்து விட்டாள். இரண்டாங் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யலாம்!’’

டொக்டரின் ஒவ்வொரு வார்த்தையும் வெறுப்பைக் கக்கிச் சீறுகின்றன.

கல்யாணி! உன் பிரேதம் வீட்டிற்கே வரவில்லை. அதற்கிடையில் டொக்டர் பைத்தியக்காரத் தனமாகப் பேசுகின்றாரே...—

நானா?......அவள் இறப்பதை விரும்பினேனா?...

‘‘ஓம் நீர் ஒரு மிருகம்! அவள் மூன்று மாதக் கர்ப்பிணி!’’

உலகம் முழுவதும் சுழல்கின்றது.

**கல்யாணி நீயா?**

பெண் மென்மையினால் மட்டுந்தான் பூ என்றழைக்கப் படுகின்றாளா?

**பூவிலே தேன்குடிக்க வெறிகொண்டு அலைந்த வண்டு நானல்ல என்பதை நீயே அறிவாய்.** □




தாயகம் விட்டு வந்து, தமிழகம் மற்றும் தமிழ் கூறும் நல்லுலகம் தன்னில் வாழும், ஈழத்தமிழர் நெஞ்சாக வெளிவரும்‘ அக்கினிக் குஞ்சு’ பத்திரிகை உலகிலே ஒரு பிஞ்சாக இருந்தாலும், நல்ல தமிழும் நலுங்கான நடையும் கொண்ட ஒரு செம்பருத்திப் பஞ்சு. ஈழத்தமிழுக்கு முண்டாசு கட்டி அழகு பார்க்கின்ற அக்கினிக் குஞ்சுக்கு என்வாழ்த்துக்கள்.

**-கோவிலூர் செல்வராஜன்**
நோர்வே

இது வரை வெளிவந்த அக்கினிக் குஞ்சு அட்டைகளுள் 4-வது அட்டை மிகத் தெளிவாகவும் அழகாகவும் இருந்தது.

‘தாயக மண்ணில்’ மிக அருமையான கட்டுரை. வெளிநாட்டில் வாழும் எமக்கு சொந்த மண்ணில் என்ன நடக்கின்றது என்பதை அறியக் கூடியதாக இருக்கிறது.

**-மோகன் சுந்தரம்**
சுவிற்சிலாந்து



படிப்பகம்

www.padippakam.com

# ஈழத் தமிழரின் அரசியல்: ஒரு சாட்சியம் 4

## 2) சூராதி சூரன்!

ஈழத் தமிழர் அரசியலுக்கும் நல்லூருக்கும் ஓர் ஒட்டுறவு இருந்து வந்துள்ளதாகவுந் தோன்றுகின்றது. இஃது ஆறுமுகநாவலரின் பிறப்பால் ஏற்பட்டது அல்ல. இந்த சாட்சியம் அளிப்பவனும் நல்லூரில் பிறந்தவனே. எது காரமோ? எது அமிலமோ? ஒன்றை ஒன்று நடுநிலைப்படுத்தும் என்கிறது விஞ்ஞானம். பிற்காலத்தில் 'தமிழீழம்' என்கிற எல்லை பற்றிய உணர்ச்சி விசாரத்தில் ஈடுபடவுஞ் செய்த தமிழரசுக் கட்சி கல்லெறிச் சமாக்களின் மத்தியிலே, நல்லூரின் தெற்கெல்லையாகத் திகழ்ந்த கைலாய பிள்ளையார் கோயில் வீதியிலே அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது என்பதினாலும் சம்பவித்ததில்லை. ஈழத் தமிழருடைய அரசியல் அபிலாஷைகளை, பிராந்திய வல்லரசாக வளர அவாவிய இந்திய நலன்களை வென்றெடுப்பதற்குப் பகடைக் காய்களாகப் பயன்படுத்தும் விளையாட்டில், கூலிப் படைகளாய் நிலை கொண்ட இந்தியப் படையை எதிர்த்துப் போராடுதல் வேண்டும் என்கிற தீர்மானம் நல்லூரிலே எடுக்கப் பட்டது என்பதினாலும் இந்தக் கியாதி சுரந்ததில்லை. தமிழ் ஈழம் சாத்தியம் என்கிற நம்பிக்கை, 'இலங்கைத் தீவுக்குப் புயலால் ஒதுங்கிக் கரையடைந்த போத்துக்கேயர் நாடாளும் சன்னதம் கொண்ட காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் சுதந்திர தமிழரசு ஒன்று நிலை கொண்டிருந்தது என்கிற வரலாற்று மெய்ம்மையிலே தான் வேர் பாய்ச்சி இருக்கின்றது. இந்தத் தமிழரசின் கோநகராக நல்லூரே திகழ்ந்தது. இதனாலேதான் அப்படி ஓர் உறவு இருக்கின்றது என்று அறிவார்ந்து கற்பிக்கவும் இயலாது. முருகனுக்கும் நல்லூருக்கும், முருகனுக்கும் தமிழர்களுக்கும் உள்ள சம்பந்தங்களினால் இந்த உறவு சினைத்திருத்தல் சாத்தியமா? இப்பொழுதுதான் அவனுடைய நினைவுகள் உருபு வாய்ந்த நிதானத்தை அடைகின்றது. 'யாழ்ப்பாணத்துச் சமயம் சைவ சித்தாந்தம்; யாழ்ப்பாணத்துக் கலாசாரம் கந்த புராண கலாசாரம்' என்று காலமெல்லாம் கட்சி பேசினார் பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை. கந்த புராண கலாசாரத்தின் காவல் கோபுரம் போன்று நல்லூர்க் கந்தனின் கீர்த்தி நிலைத்துள்ளது என்பது வாஸ்வதம்!

தமிழுக்குப் புகழ் சேர்க்க நாம் வசதியாக வளைத்து வைத்துள்ள கடவுள் முருகனே என்பதை ஆட்சேபிப்பதற்கு வழியும் இல்லை. இந்த முருகனுக்குத் தமிழ் மணம் பூசுவதில் தமிழறிஞர் பலரும் தாராள மனப்பான்மை சுரந்தனர். பண்டைய தமிழன் நிலத்தின் இயல்பு குறித்துத் திணை வகுத்தான். மலையும் மலை சார்ந்த நிலமும் குறிஞ்சி. அதன் கடவுளாக வழிபட்ட குறிஞ்சிக் கிழவோன் அல்லது மலைக் கிழவோன் என்பன முருகனையே குறிக்கும். எனவே, முருகன் தமிழ்க் கடவுள். ஔவைப் பிராட்டிக்குச் 'சுட்ட பழம்' உதிர்த்து, முருகன் லீலைகள் புரிந்தது தமிழ்ப் பற்றினால் அன்றோ? இவ்வாறெல்லாம் அவர்கள் முருகனின் தமிழ்த் தனத்திற்குக் கதைகள் சோடிப்பர். இருப்பினும் நல்லூரின்கண் நிலை கொண்டுள்ள மூர்த்தி

---

8-ம் பக்க தொடர்ச்சி

இலங்கை அரசு ஈழப்புலிகளுடன் மட்டும் பேசினால் போதாது. இதர தமிழ்க் குழுக்களையும் உத்தேச பேச்சு வார்த்தையில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்த சரத்துக்களை அமல் செய்ய வேண்டும். வட கிழக்கு மாகாண சபையை மீண்டும் செயல்படச் செய்ய வேண்டும், என்று இலங்கையில் இந்தியா கூறி வருகிறது. இது தொடர்பாகவும் தமிழ்நாட்டில் உள்ள ஈழ அகதிகள் குறித்தும்தான் புது தில்லியுடன் ஹேரத் பேசப்போகிறார் என கொழும்பில் பேசிக் கொள்ளப்பட்டது.

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவை ஒதுக்கி விடுவது தான் இலங்கை அரசு, மற்றும் ஈழப்புலிகளின் விருப்பம். ஆனால் அது நடக்கக் கூடியதல்ல. இந்தியாவையும் சரிக்கட்டி பிரச்சினையை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதுதான் இருதரப்பினருக்கும் நல்லது என்பது நாம்சொல்லித்தான் அவர்களுக்குத் தெரிய வேண்டும் என்பதில்லை. □

-கார். முரளீதரன்



படிப்பகம்

www.padippakam.com

கந்தசாமி என்றே யாழ்ப்பாணம் கொண்டாடுகின்றது. எனவே அவர் தம் கீர்த்தியைக் கந்த புராண வரலாறு கொண்டு தரிசித்தலே சௌக்கியம். சூரபதுமன் என்கிற அசுரன் இல்லாமல், கந்தனின் அவதாரம் நிகழ்ந்திருக்க மாட்டாது. சூரபதுமன் அசுரனேயாயினும், கடுந்தவம் இயற்றி வரங்கள் பல பெற்றான். வலிமையிலே ஏமாப்புச் சுகித்தான். தேவர்களையும் அடிமை கொண்டு, கொடுமைப் படுத்தினான். 'சூரனை அடக்குவதற்கு ஒரு குமரனைத் தந்தருளும்' என்று தேவர்கள் சிவபெருமானை வேண்டி நின்றதினால் கந்தனின் உற்பவம் நிகழ்ந்தது என கந்தபுராணம் விரிகின்றது.

மூத்த தலைவர் மூவரைத் தொடர்ந்து ஈழத் தமிழர் அரசியல் தலைமைத்துவத்தை சுவீகரித்துக் கொண்ட ஜீ.ஜீ. பொன்

# அபிமன்யு

னம்பலம் சூரபதுமன் நிகர்த்தவர் என்று சாட்டப்பட்டதற்கு அவன் சாட்சியாய் அமர்கின்றான். அப்பொழுது அவன் சம்பத்திரிசியார் கல்லூரியில் எஸ்.எஸ். ஸி. மாணவன். மனித ஏற்ற தாழ்வுகளுக்கு கடவுள் துணை நிற்கின்றார் என்ற அவதியினாலும், ஈரோட்டுக் குடியரசுப் பதிப்பகப் பிரசார போதையினாலும் நாஸ்திகத்தை மதமாக வரித்துக் கொண்டான். கம்யூனிஸ்ட் கட்சியின முழுநேர ஊழியனாய், FORWARD பத்திரிகையின் ஆசிரியக் குழு உறுப்பினராய் கொழும்பில் வாழ்ந்த மு. கார்த்திகேசன் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி ஆசிரியனாய் யாழ்ப்பாணம் வந்து, 'குட்செற்' றடியில், ஸ்ரான்லி வீதியில், அதுவரை காலமும் ஆடுகள் வாழ்ந்த 'சிறாப்பர்' கடை ஒன்றில் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையைத் திறந்து அதன் செயலாளராக அமர்ந்திருந்தார். விக்டோரியா வீதியில்குடியிருந்த அவரிடம் அவன் டியூஷனுக்குபோகும் ஒழுங்கு வாய்த்தது.வாரா வாரம் அவனுடைய கதைகளோ, கவிதைகளோ, கட்டுரைகளோ பத்திரிகையின் பக்கங்களை (பாலர் வட்டாரப் பகுதிகளில்) றொப்பிக் கொண்டிருந்த காலம். அரசியல் பற்றியும், இலக்கியம் பற்றியும், மனித நேயம் பற்றியும் புதிய ஞானங்கள் கார்த்திகேசனின் அருளால் அவனுக்குப் பொசியலாயிற்று. 'பொதுவுடமையே பூலோக சொர்க்கம்' என்ற வாசகத்துடன் சொந்தமாக letter-pad டும் அடித்து வைத்திருந்தான். தம்பித்துரை நியூஸ் ஏஜன்ஸி தருவித்த அத்தனை சஞ்சிகைகளையும் வாசிப்பதிலே இன்பங் கண்டான். கல்லூரிப் பாடங்களைப் பார்க்கிலும் இலக்கிய விஷயங்கள் இனித்தன போன்ற மயக்கம். அத்தகைய ஒரு பக்குவத்தினை அவன் அடைந்திருந்த காலத்திலேதான் சோல்பரி யாப்பின் கீழ், இலங்கையின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் அசுர கதி அடையலாயின. ஜீ.ஜீ. தலைமை தாங்கி நின்ற அரசியல் கோஷம் தேச நலன்களுக்கும் தொழிலாளர் வர்க்க நலன்களுக்



கும் விரோதமானது என்ற எண்ணமே அவன் மனதிலே வளர்ந்திருந்தது. பெரும்பான்மை மாணவ அபிப்பிராயங்களுக்கு எதிரான நிலைப்பாடு இதுவாகும். பருத்தித்துறைத் தொகுதியில் மட்டுமே, மின்னலைப்போல 'எங்கிருந்தோ முளைத்த' பொன். கந்தையா கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகப் போட்டியிட்டார். அங்கு சென்று தேர்தற் சேவகஞ் செய்யும் அளவுக்கு அவனுக்கு வயசும் இல்லை; வசதியும் இல்லை. அவனை 'ஒரு ஆள்' என்று கார்த்திகேசனைத் தவிர்ந்த ஏனைய கம்யூனிஸ்டுகளே கணக்கெடுக்கவில்லை. எந்த வேட்பாளருக்கும் Pro என்ற மனோநிலை இல்லை.

### ஈழத்துக் கல்வி வளர்ச்சி-9

கலைப்பாடங்கள் எல்லாம் 1959-ம் ஆண்டில் தேசிய மொழிகளே போதனா மொழிகளாக அமைந்தன. கணித-விஞ்ஞான பாடங்கள் 1958-ம் ஆண்டுடன் தேசிய மொழிகளிற் கற்பிக்கப் பட வேண்டுமெனும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அரசாங்கப் பணத்தில் வளர்க்கப்படுங்கல்வி, அரசாங்கத்தினாலேயே நிருவகிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையைச் செயலாக்கும் முகமாக 1960 லும், 1961லும் பாராளுமன்றத்தில் இரு சட்டங்கள் நிறைவேறின. பிரத்தியேக அரசாங்க உதவி பெறாத, கட்டணம் வசூலிக்காத பாடசாலைகளைத் தவிர்ந்த மற்றைய எல்லா உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளும் வித்தியாபதியின் முகாண்மையின் கீழ்க் கொண்டு வரப்பட்டன. 1961-ம் ஆண்டில் அத்தகைய பாடசாலைகளின் சொத்துக்கள் அரசாங்கச் சொத்துக்களாக்கப்பட்டன. கல்வித் திணைக்களம், பாடசாலை முகாமை ஆகிய இரண்டு நிருவாகம் கல்வியிலே தலையிடும் முறை இத்தால் ஒழிக்கப்பட்டது.

-கல்விமான்



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், தமிழ்க் காங்கிரஸுக்கும் குறிப்பாக ஜீ.ஜீ. க்கும் Anti என்கிற ஓர் அரசியல் போக்கிலே உடன்பாடு கண்டான். இது குழந்தைத் தனமானது என்பதை இனங்காண முடிகின்றது. பரிணாம வளர்ச்சியில் இத்தகைய போக்குகளும் அடங்கும் என்பது சமாதானம். இதனாலும் தமிழ்க் காங்கிரஸுக்கு எதிரான கூட்டங்களுக்கு அவன் சென்றான்.

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் ஆயுட்காலத் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம்பலம், சட்டசபையில் ஒரே ஒரு தமிழ் அமைச்சராக (உள்நாட்டு மந்திரி என்று ஞாபகம்) 'கொலுவிருந்த' மஹாதேவாவை எதிர்த்துப் போட்டியிட்டார். தன் சொந்தத் தொகுதியான பருத்தித்துறையை விட்டு, ஈழத் தமிழர் அரசியல் தலைமைத்துவத்தை தன் ஏகபோகமாக வென்றெடுப்பதற்கே ஜீ.ஜீ. யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டார். மகாதேவா, சேர் அருணாசலத்தின் வாரிசும் மகனுமாவர். அவர் மூத்த தலைவர் மூவருடைய நிலப் பிரபுத்துவத் தலைமைத்துவத் திருட்டாந்தமாகத் திகழ்ந்தார். அவர் யாழ்ப்பாண மக்கள் மத்தியிலே ஓர் அந்நிய மனிதனைப் போன்று தோன்றினார். யாழ்ப்பாண மக்களுடைய பழகு தமிழை அறியாத சிலைமுகம்! வளர்ப்பாலும் மனப்பான்மையினாலும், யாழ்ப்பாண மண்ணில் ஒட்டாத கடந்த காலத் தேவ புருஷர் போன்று தோற்ற மளித்தார். தமிழிலே பேசுவதற்கு மகா சிரமப்பட்டார். 'என்னை இந்தப் பாதாள மண்டபத்துக்கு அனுப்பி வையுங்கோ!' என்று ஒரு கூட்டத்திலே பேசினார். 'ஜீ ஜீ. - பாராளுமன்றத்திற்கு!' 'மகாதேவா - பாதாள மண்டபத்துக்கு!' என்று ஜீ.ஜீ. ஆதரவாளர்கள் மகாதேவாவின் தமிழை யாழ்ப்பாணம் முழுவதும் நாறடிக்கச் செய்தார்கள். காங்கிரஸ் பிரசாரக் கூட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில், மகாதேவாவுக்குக் கூடிய கூட்டம் பரிதாபமாகவே இருந்தது. நாளொரு வண்ணமாக அவர் தமது ஆதரவை இழப்பதாகவுந் தோன்றியது. இருந்தபோதிலும், ஜீ.ஜீ. வெற்றி பெறக் கூடாது என்கிற சிறுபிள்ளைத் தனமான ஆசை மனத்திலே வளர்ந்து இருந்தது.

அன்று, யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானத்திலே, மகாதேவாவுக்கு ஆதரவாகக் கூடிய கூட்டம் எண்ணிக்கையிலும் குறைவாகக் காட்சி தந்தது. அது இறுதிப் பிரசாரக் கூட்டம் என்று நினைவு. அந்த மேடையிலே அமர்ந்திருந்தவர்களுள் அழகு தமிழிற் பேசும் வல்லமை பெற்றவர் சு. நடேசப்பிள்ளை மட்டுமே. அவர் பிறப்பால் இந்தியர். இராமநாதன் துரையினால், தாம் நிறுவிய பரமேஸ்வராக் கல்லூரியிலே, கல்விப் பணி புரிவதற்காக, இந்தச் சைவ வேளாளர் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டவர். தாமே சமைத்து உண்ணும் ஆசாரம் ஓம்பும் 'குடுமித் தமிழ'னாயும், நைட்டிய பிரமச்சாரியாகவும் தமது வாழ்க்கையை யாழ்ப்பாணம் - திருநெல்வேலி மண்ணிலே துவங்கியவர். இராமநாதன் துரைக்கு ஆங்கிலச் சீமாட்டி மூலம் பிறந்த குலக்கொழுந்தாம் மகள் பிறப்புறுப்பின் சில குறைபாடுகளுடன் ஜனித்தவர் 'என்பர். இதனால், அந்த மங்கைக்கு ஏற்ற வரன் துரையின் உறவு வட்டத்திற்குள் குதிராது போயிற்று. துரையின் மனக்குறையைப் போக்கும் வகையில், அவர் மருமகனாக மாறுவதற்கு இணங்கிய சீலர். இந்த மண உறவின் காரணமாய் அவர் இராமநாதன் துரையின் அரசியல் சின்னமாகத் திகழ்ந்தார். சட்ட சபை உறுப்பினர். உறவால் மகாதேவாவின் மைத்துனர். ஜி.ஜி. பொ. வின் துணைத் தளபதியாய் நியமனம் பெற்றிருந்த எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவரை எதிர்த்து காங்கேசன் துறைத் தொகுதியிலே போட்டியிட்டார். இந்த வர்த்தமானங்களுக்கு அப்பாலும், அவர் ஒரு தமிழறிஞர் என்பது மறுப்பதற்கில்லை. (அந்தக் கூட்டம் நடைபெற்ற பொழுது, அடுத்த ஆண்டே அவர் தனது தமிழாசானாய் வாய்த்தல் கூடும் என்று அவன் கனவு கூட கண்டதும் இல்லை.). □



**சுதந்திரத் தாகம்**

வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ? - என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ?

□

புகழுநல் லறமுமே யன்றியெல் லாம்வெறும்
பொய்யென்று கண்டாரேல் - அவர்
இகழுறும் ஈனத்தொண் டியற்றியும் வாழ்வதற்கு
இச்சையுற் றிருப்பாரோ?

படிப்பகம்

www.padippakam.com

# சென்னைக் கடிதம்

ராஜீவ் காந்தி படு கொலையில் சில ஈழத் தமிழ் இளைஞர்களும் சம்பந்தப் பட்டிருக்கிறார்கள் என்பது உறுதியான பிறகு, தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் வாணலியிலிருந்து தப்பி அடுப்பிலேயே விழுந்து விட்ட நிலைக்கு உள்ளாகி உள்ளனர்.

கடந்த ஆண்டு ஜூன் 19 ம் தேதி ஈ பி ஆர் எல் எஃப் தலைவர் பத்மநாபாவும் வேறு சிலரும் சென்னையில் படுகொலை செய்யப்பட்டதும் அன்று ஆட்சி பீடத்தில் இருந்த தி.மு.க. அரசு, தமிழ் நாட்டில் அகதி முகாம்களுக்கு வெளியில் தங்கியுள்ள அனைத்து இலங்கை பிரஜைகளும் தங்கள் பெயர் விவரங்களை அருகில் உள்ள காவல் நிலையங்களில் பதிந்து கொள்ள வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.

இந்த ஆண்டு மே 21 ம் தேதி சென்னை அருகே ராஜீவ் படுகொலை செய்யப் பட்டதும் அந்த ஆணைக்கு புதிய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புது வடிவமும் புத்துயிரும் அளித்திருக்கிறார். கடந்த ஆண்டைப் போலில்லாமல் இப்போது ரொம்பவும் கெடுபிடி.

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கையர்கள் அனைவரும் தங்களைப் பற்றிய விவரங்களை, புகைப் படங்கள், கை விரல் ரேகைகள் சகிதம் பதிவு செய்து கொள்ள அவகாசம் தரப்பட்டிருக்கிறது. இலங்கையர்கள் என்றால் ஈழத்தமிழர் மட்டும் இல்லை. இந்திய வம்சாவழியினர், முஸ்லிம்கள் ஏன் சிங்களவர்களும் அடக்கம் அல்லவா?

கடந்த ஆண்டில் அலட்சியமாக இருந்தவர்கள் கூட இந்த முறை அரசு ஆணையை கண்டும் காணாதது போல விட்டு விடத் தயாராக இல்லை.

அகதி முகாம்களுக்கு வெளியே சுமார் ஒருலட்சம் பேர் வரை தங்கியிருப்பதாக தமிழக அரசு கணக்கு எடுத்துள்ளது. இவர்களில் எத்தனை பேர் காவல் நிலையங்களில் தங்களைப் பற்றிய விவரங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர் என்று தெரியவில்லை. ஆனால், அரசு 12-7-91 ல் வெளியிட்ட விளம்பரத்தில், காவல் நிலையங்களில் தங்களைப் பற்றிய விவரங்களை பதிவு செய்வதில் இலங்கையர்கள் காட்டி வரும் ஆர்வமும், அரசுக்கு அளித்து வரும் ஆதரவும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது உண்மையா, அல்லது சம்பிரதாய வார்த்தைகளா என்று தெரியவில்லை. அரசு அளித்த



ஏப்ரல் மாத அக்கினிக் குஞ்சுவின் அட்டைப் பட விளக்கம் உள்ளத்தை உருக்குவதாக இருந்தது. கவிதை நடையில் எழுதப்பட்டு, அற்புதமான அழியாச் சித்திரமாகவும், ஈழ மக்களின் இன்றைய அவலங்களையும் நாளைய சந்ததியினர் எதிர் நோக்கும் அலங்கோலங்களையும் நேர்த்தியான சித்திரப் படைப்பாகவும் அது வரையப் பட்டுள்ளது.

தமிழீழ அபலைத் தாய், தன் செந்நீரிலே தன் குழந்தையை உருவாக்குவதோடு, தப்பவிட்ட கலைகள்-கலாசாரங்கள் - பண்புகளையும் அதனோடு ஊட்டுகின்றாள். புலம் பெயர்ந்த தமிழர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் இவை.

இந்தச் சித்திரத்தைத் தீட்டிய கலைஞர் யாரோ?

-ரகுராமன்
சென்னை

சொந்த நாடு- தந்தை- சுற்றம்- வீடு- வேலி- மரம்- கோயில்- குளம்- திருவிழாவும் இல்லை.

ஆனால், மகனே உன் பசிக்கு மட்டும் என் உடலிலேயே முதல் உண்டு. என் முதலில் நீ வளர்ந்து நமது கலை- கலாசார- பண்புகளைப் பேணு.

-மாலிக் சென்னை

படிப்பகம்

www.padippakam.com

3 வார அவகாசத்தைப் பயன் படுத்தி எத்தனை பேர் உள்ள படியே தங்களை பதிவு செய்து கொண்டுள்ளனர் என்பது வரும் 19 ம் தேதிக்கு பிறகு தெரிய வரும்.

பெயர்களை பதிவு செய்யாதவர்களுக்கு என்ன நடக்கும்? நாடு கடத்தல் உள்பட நாட்டின் பல்வேறு சட்ட திட்டங்களின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு மிரட்டி உள்ளது. ஆனால் இதனை நாம் வெறும் மிரட்டலாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. இலங்கை தமிழர்களுக்கு எதிராக தமிழக அரசு எதுவும் செய்யும். யாரும் அதனை எதிர்த்து குரல் கொடுக்கப் போவது இல்லை.

அந்த அளவுக்கு ஈழத் தமிழர் மீது தமிழ் நாட்டில் அதிருப்தி வளர்ந்து விட்டது. ஈழத் தமிழருக்கு ஆதரவு காட்டப் போய் தி.மு.க. வரலாறு காணாத தோல்வி கண்டு விட்டது என்று தி.மு.க. வினருக்கு குமுறல். தமிழ் நாட்டில் ஈழத் தமிழர் நடவடிக்கைகளை கண்டித்து வந்ததால்தான் தங்களுக்கு வரலாறு காணாத வெற்றி கிடைத்தது என்பது இ. காங்கிரஸ் - அ.தி.மு.க வினரின் நம்பிக்கை.

இந்நிலையில், பலவீனமான சிலரது கூக்குரலைத் தவிர வேறு யார் குரல் கொடுப்பார்கள் என்று தோன்றவில்லை.

இது போதாது என்று இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான உத்தரவுகளை ஜெயலலிதா அரசு விலக்கிக் கொள்ளாவிட்டால் பாம்பன்பாலத்தை தகர்க்கப் போவதாக மிரட்டல் வேறு வெளியிடப் பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இவை எல்லாம் எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்ப்பது போல உள்ளது.

நமக்கு சொந்தமோ உரிமையோ இல்லாத இடங்களில் அதிலும் அதிதியாக தங்கியுள்ள இடங்களில் எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு சில மரபுகள், பண்பாட்டு நெறி முறைகள் உள்ளன. இதற்கு எழுத்து மூலமான சட்ட திட்டங்கள் இல்லைதான். இருந்தாலும் அந்தப் பண்பாடு நமது இரத்தத்தில் ஊறிவிட்ட ஒன்று.

நாட்டு நடப்புக்களைப் பார்க்கும்போது நமது பண்பாட்டு நெறி முறைகளுக்கு நாமே மதிப்பு கொடுப்பதில்லையா என்று சந்தேகமாக உள்ளது.

ராஜீவ் காந்தியின் படுகொலையில் சில ஈழத்து இளைஞர்களுக்கும் தொடர்பு உள்ளது என்பது நமக்கு கவலை தரும் சேதி.

ராஜிவை கொன்றது ஈழத்துப் பெண் தான் என்பதும் அவளை முடுக்கி விட்டது அரைட்ஜனுக்கும் மேற்பட்ட ஈழத்து இளைஞர்கள் தான் என்பதும் போலிஸ் தரப்பில் தரப்படும் தகவல். இக்கொலையில் முக்கியமாகத் தேடப்படும் இருவர் சிவராசன், சுபா. அவர்களும் ஈழத்தவர்கள்தான். அவர்கள் பிடிபடுகிறார்களோ இல்லையோ, அக்கினிக் குஞ்சு அடுத்த இதழ் வெளிவருவதற்குள் ராஜீவ் படுகொலை வழக்கு சென்னையில் விசாரணைக்கு வந்து விடும்.

இந்தக் கொலை தொடர்பாக கைது செய்யப் பட்டுள்ள 13 பேரும் போதுமான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்கள் என்று அக்கொலை பற்றி விசாரணை நடத்தும் சிறப்பு உளவுப் படையினர் கூறுகின்றனர்.

இக்கொலை வழக்கு விசாரணையின் போது வெளியாகும் தகவல்கள் நிச்சயமாக தமிழ் நாட்டில் உள்ள அகதிகளுக்கு எதிராகவே பயன்படுத்தப் படக் கூடிய ஆபத்து உண்டு.

அப்படி ஒரு நிலை உருவானால் பல்லாயிரக் கணக்கான அப்பாவி ஆண், பெண், குழந்தைகளின் கதியை எண்ணிப் பார்க்க மனம் கூசுகிறது.

அகதிகளாக அந்நிய மண்ணில் தங்கியுள்ள அவர்கள் அப்படி ஒன்றும் நிம்மதியாக இல்லை. எப்போது சொந்த மண்ணுக்குத் திரும்புவோம் என்ற ஏக்கத்துடன் அவர்கள் நாள்களை கடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களது துயரம் தொடர்கதையாகி விடக் கூடாதே என்பது தான் நமது கவலை.

ஒரு வேளை இக்கொலையில் ஈழப் புலிகள் இயக்கத் தொடர்பு உறுதிப்படுத்தப் படுமானால், ஏற்கெனவே, அரசியல், சமூக, பொருளாதார, கல்வி, கலாசாரத் துறைகளில் வெகுதூரம் பின் தள்ளப்பட்டு விட்ட ஈழத்து சமுதாயம் மேலும் பல ஆண்டுகள் பின் தங்கிவிடக் கூடும் என்பது சர்வ நிச்சயம்.

ராஜீவ் படுகொலை என்பது ஒரு தனி நபருக்கெதிரான பாதகச் செயல் அல்ல. அது ஒரு தேசத்தையே விரோதித்துக் கொள்வதற்குச் சமம்.

அதிலும் இந்தியாவையா விரோதித்துக் கொள்வது? அதனால் கிடைக்கக் கூடிய அதிக பட்ச நன்மை என்ன?

நமக்கு நன்மை பயக்காத காரியங்களைப் பற்றி நினைத்துப் பார்ப்பது கூடத் தவறு.

லட்சோபலட்சம் ஈழத் தமிழர் எதிர்கால நலன் கருதி நமக்கு இப்படி எல்லாம் சிந்திக்கத் தோன்றியது. நமது சிந்தனை தவறு என்று நியாயப் படுத்தக் கூடியவர்கள் யாராவது இருந்தால் எழுதுங்கள்.

**-எஸ். எம். கார்மேகம்**

□ சுதந்திரம்: □

**எங்களுக்குப் பிடித்தமானவற்றிற்கு அடிமைகளாக வாழ, பிடிக்காதவற்றினின்று பெறும் விடுதலையே சுதந்திரம்.**



படிப்பகம்

www.padippakam.com

# "INDO CEYLON SPICES"

மெல்பர்னில் உங்களுக்குத் தேவையான
சகலவிதமான பலசரக்குச் சாமான்களுக்கும்
உன்னத உயர்ந்த வியாபார ஸ்தாபனம்.

# INDO - CEYLON SPICES

திருமண, புதுமனை புகுவிழா - கோவில்
அபிஷேக வாசனை திரவியங்களும், மற்றும்
குமுதம், ஆனந்த விகடன் போன்ற தென் இந்திய
சஞ்சிகைகளும், வீரகேசரி நாளேடும் இங்கு கிடைக்கும்.

★

**புதிய – பழைய தமிழ் வீடியோ, ஓடியோ
பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்...**

# "INDO CEYLON SPICES"

**4 - 5/55 SINCLAIR ROAD
DANDENONG - 3175
VICTORIA**

**TEL-(03)
794 0466**

**FAX-
706 1592**

படிப்பகம்

www.padippakam.com


அச்சுத் தொழிலைக் கலைப் பணியாகவும் மேற்கொண்டு

உங்கள் அச்சுத் தேவைகளை

நிறைவுற நிறைவேற்றுபவர்கள்

# ஏ ஆர் பிரிண்ட்ஸ்

- இலக்கிய நூல்கள்
- சிறப்பு மலர்கள்
- சஞ்சிகைகள்

அச்சிடுவதில் நீண்ட கால அனுபவம் பெற்றவர்கள்

## உங்கள் தேவையென்ன?

: லெட்டர் பேட்கள்

: பில் புத்தகங்கள்

: திருமண அழைப்பிதழ்கள்

எதுவாக இருந்தாலும் அணுகுங்கள்

# AR prints

Please mention in the FAX
M.A. Rahman P.P. 420011 & 420022
FAX 91-44-517466 & 517966

375-8 Arcot Road
Kodambakkam
MADRAS 600 024
INDIA


Printed and Published by M A. Rahman at AR prints, 375, Arcot Road, Madras 600 024 on behalf of PRIYA PUBLICATIONS, AUSTRALIA. Editor : YAL. S. BASKAR

படிப்பகம்